Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

# உதயன்

விலை
ரூ2/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA:
T' Phone: 23794

சுடர்: 4 சுக்கில ஹூ ஆனி மீ 18 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ்தா பிறை 27 (02 : 07 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 176

# திங்கள் முதல் தென்பகுதி வேலைநிறுத்தம்

# ஏனைய துறைகளுக்கும் பரவும்?

## பேச்சில் முன்னேற்றம் என்ற அரசின் அறிவிப்புக்கு மறுப்பு

கொழும்பு, ஜூலை 2

போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வேலைநிறுத்தம் சம்பந்தமாக இன்று ஞாயிற்றுக்கிழமை சமரசம் காணப்படாவிடில் —

நாளை திங்கட்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தம், சுகாதாரம் மின்சாரசபை, மாநகரசபைகள் வங்கிகள், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய துறைகளுக்கும் விஸ்தரிக்கப்படும் — என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய போக்குவரத்துச் சபை நடவடிக்கைக் குழு, இதன் தாய்ச்சங்கமான தேசிய தொழிலாளர் நடவடிக்கைத் தலைமையகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்தனர்.

போக்குவரத்துச் சபைகளின் ஊழியர்களது வேலைநிறுத்தம் சம்பந்தமாக நடந்த பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டதாக அரசு அறிவித்ததையும் அவர்கள் மறுத்தனர்.

செய்தியாளர் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் மாநாடு நடைபெறும் இடத்தையும் தங்களின் அடையாளத்தையும் வெளியிட வேண்டாம் என்று செய்தியாளர்களைக் கேட்டுக்கொண்டனர்.

பேச்சாளர்கள் என்று மட்டுமே செய்திகளில் கூறப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அவர்கள் மாநாட்டில் சொன்னதாவது:—

வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காண அரசு உண்மையாக விரும்புகிறது என்று நம்பியே நாம் துணை அமைச்சர் ரணசிங்காவுடன் பேச முன்வந்தோம்.

பேச்சு நடந்துகொண்டிருந்தபோது, பேச்சுக்களை அரசு பிரசாரத் தந்திரமாக பயன்படுத்துகிறது என்பதை அறிந்துகொண்டோம்.

ரூபவாஹினியிலும் அரச மற்றும் பொதுசனத் தொடர்பு சாதனங்களிலும் கூறப்பட்டது போன்ற எதற்கும் நாம் சம்மதிக்கவில்லை.

இந்திய அமைதிப்படையினரைத் திருப்பி அனுப்புவதற்குத் தடையாக எமது வேலைநிறுத்தம் இருப்பதாகச் சொல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களை ஏற்றிச் செல்ல லொறிக்காரர் தயக்கம்

### துறைமுக குதங்களில் தேக்கம்

கொழும்பு, ஜூலை 2

கொழும்புத் துறைமுகத்தில் உணவுப்பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு தனியார் லொறிச் சொந்தக்காரர்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரியவருகிறது.

'வெளியார் பயமுறுத்தல்' காரணமாகவே லொறிச் சாரதிகள் துறைமுகம் செல்வதற்கு அஞ்சுகின்றனர்.

இதனால் சுமார் 60 ஆயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் துறைகத்தில் உள்ள குதங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

சாரதிகள் வேலை செய்யத் தயக்கம் காட்டி வருவதால் கடற்படை வீரர்களே தனியார் லொறிகளையும் செலுத்தி வருகின்றனர்.

இதன் அர்த்தம் தனியார் லொறிகளை அரசு சுவீகரித்து விட்டது என்பதல்ல என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

## வவுனியா, முல்லையில் நேற்று ஊரடங்கு அமுல்

யாழ்ப்பாணம் ஜூலை, 2

வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

நேற்று அதிகாலை வவுனியாவில் ஒலிபெருக்கி மூலம் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு காரணமாக வெளியூர்களுக்குச் சென்ற வாகனங்கள் அனைத்தும் உடையார்சட்டு, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளுடன் யாழ்ப்பாணம் திரும்பி வந்தன. (ஒ-10-9)

## வேலை நிறுத்தத்தினால் இதுவரை ரூபா 25 கோடிக்கு மேல் நஷ்டம்!

### நேற்றுவரை 12 பஸ் உரிமையாளர்கள் கொலை!!

கொழும்பு. ஜூலை 2

கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமான போக்குவரத்து ஊழியர்களின் வேலைநிறுத்தம் இன்னமும் தொடர்கிறது.

நேற்று வரை 12 தனியார் பஸ் உரிமையாளர்கள் தென்பகுதி தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ் வேலைநிறுத்தத்தினால் அரசுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் ஏற்பட்டு உள்ள நட்டம் 25 கோடி ரூபாவுக்கு அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பஸ் சேவைகள் சீர்குலைந்ததால் மட்டும் அரசுக்கு 11 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அரச மற்றும் தனியார் தேயிலைத் தோட்டங்களில் தேயிலைக் கொழுந்து பறிக்கும் வேலைகள் தடைப்பட்டு உள்ளன.

தேயிலை ஏலவிற்பனை சென்ற வாரம் நடைபெறவேயில்லை. தேயிலை ஏற்றுமதியும் ஸ்தம்பித்து விட்டது.

இது, நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைக் கொண்டுவரும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

**சுபநேரம்**
02—07—1989
ஆனி — 18
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
08.56 முதல் 10 26 வரை
ராகுகாலம்:
04.26 முதல் 05.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அமாவாசை விரதம்

### முச்சந்தி முரளி



என்ன? எல்லாப் பக்கத்தாலும் மேலும் மேலும் நிலைமை மோசமாகும் போலை இருக்குதே...! மக்கள் பாடுதான் திண்டாட்டம் பாருங்கோ...!

## நாளை விரிவுரைகள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்-தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த மாணவர்கள் நாளை திங்கட்கிழமை வகுப்புகளுக்குச் சமூகம் கொடுக்க உள்ளதாக நேற்று அறிவித்தனர்.

கடந்த 25ஆம் திகதியில் இருந்து பாடசாலை மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்-தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் தமது வகுப்புகளையும், விரிவுரைகளையும் பகிஷ்கரித்து வந்தனர் என்பது தெரிந்ததே. (ஓ-10)

## தெற்கில் அறுவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை 2

புசல்லாவ ஐ. தே. க. வாலிபர் கிளைச் செயலாளர் உட்பட 6 பேர் கடந்த வியாழக்கிழமை தென்பகுதித் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

நிவித்திகலையில் தனித்தனி சம்பவங்களில் 4 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். ஏனைய இரண்டு பேரும் கம்பளை, சிகிரியா ஆகிய இடங்களில் கொல்லப்பட்டனர். (ஒ-எ)

## இணுவிலில் இன்று தேர்

யாழ்ப்பாணம். ஜூலை 2

இணுவில் கந்தசாமிகோவில் தேர்த்திருவிழா இன்று காலை மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

250 ஆண்டுகால வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்டம் நேற்று இடம்பெற்றது.

(சிறப்பிதழ் 3ஆம் பக்கத்தில்)

## சிராவஸ்திபுரவில் கண்ணிவெடிச் சம்பவம்

அனுராதபுரம் சிராவஸ்திபுரவில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 3 பொலிஸார் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை ரோந்துப் பணியில் ஈடுபட்ட ஜீப்பே கண்ணிவெடியில் சிக்கியதாக அறிவிக்கப்பட்டது.

இதே வேளை பொலன்னறுவைப் பகுதியில் இடம்பெற்ற தேடுதலின் போது தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 14 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ-10)

### சூட்டுச் சம்பவம்

யாழ். ஆனைப்பந்தியில் நேற்றிரவு 7.30 மணியளவில் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. (உ)

## இலங்கை பிரச்சினை குறித்து கலைஞர்,- ஜனாதிபதி பேச்சு!

சென்னை, ஜூலை 2

இலங்கைப்பிரச்சினை குறித்து மிக முக்கிய பேச்சுக்களை தமிழக முதல்வர் திரு. கருணாநிதி இந்திய ஜனாதிபதி திரு. வெங்கடராமனுடன் நேற்றுப் பேச்சு நடத்தினர் என அறிய வருகிறது.

இந்தப் பேச்சு மிக இரகசியமாக வைக்கப்பட்டது. பேச்சுக்களில் வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை.

நேற்று சென்னை ராஜ்பவனில் இச்சந்திப்பு இடம்பெற்றது. 25 நிமிடங்கள் இருவரும் பேச்சு நடத்தினர்.

இலங்கை ஜனாதிபதியின் அமைதிப்படை வாபஸ் அறிவிப்பு, இலங்கை அரசு நடத்தி வரும் பேச்சுக்கள் மற்றும் இன்றைய நெருக்கடி நிலைமைகள் குறித்து இவர்கள் பேச்சு நடத்தி இருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் வட்டாரம் தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கருணாநிதி,

''இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண சகல

(8ஆம் பக்கம் பார்க்க)

## இந்த மாதம் நடுப் பகுதியில் இருந்து வங்கிகளில் மீண்டும் நிவாரணக் கொடுப்பனவு?

யாழ்ப்பாணம், ஜூலை 2

வங்கிகளில் தேங்கிக் கிடக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணப் பணத்தை மீண்டும் மக்களுக்கு வழங்குவது குறித்து வடபிராந்திய வங்கி அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர்கள் மட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் நாலாயிரம் குடும்பங்களின் நிவாரணப் பணம் வழங்கப்படாமல் இருக்கிறது.

மொத்தம் 60 லட்சம் ரூபா இவ்வாறு பொதுமக்களுக்கு வழங்கப்படாமல் வங்கிகளில் தேங்கிக் கிடப்பதாக அறிய வந்துள்ளது.

இந்த மாத நடுப்பகுதியில் இருந்து இந்தப் பணம் வழங்கப்படலாம் என நம்பப்படுகிறது. (ஒ-10)

## போட்டிப் பரீட்சை மூலமே பயிலுநர் ஆசிரியர் தெரிவு

### முந்திய முடிவில் முழுமாற்றம்

கொழும்பு, ஜூலை 2

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் எழுத்து மற்றும் வாய்மொழி மூலப்பரீட்சைகள் மூலமே தெரிவு செய்யப்படுவர்.

கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர், நேர்முகப்பரீட்சை மட்டும் வைத்து இவ்வாசிரியர்களைத் தெரிவு செய்வது என்று கல்வி அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார தீர்மானித்திருந்தார்.

நேர்முகப் பரீட்சை மட்டும் வைத்து ஆசிரியர்களைத் தெரிவு செய்வது ஊழல்களுக்கு இடமளிக்கும் என்று முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்தே போட்டிப் பரீட்சை நடத்துவது என்ற மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதனால் முன்னர் திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதத்தில் பயிற்சி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்களே ஆகஸ்ட் மாதத்தில் கோரப்படும். (அ-எ)

## வடமராட்சியில் நேற்றும் அசம்பாவித சம்பவங்கள்

வடமராட்சி, ஜூலை 2

வடமராட்சியின் பல பகுதிகளிலும் நேற்றும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நெல்லியடி இரும்பு மதவடி என்ற இடத்தில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

மோதல்களைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

சம்பவத்தின் போது அவ்வழியாக வந்த ஐஸ்பழம் விற்கும் வான் ஒன்று பலத்த சேதமடைந்தது.

இரும்பு மதவடிப் பகுதியிலிருந்து ஏவிய ஷெல் ஒன்று வல்வெட்டித்துறை, பெரிய தம்பிரான் கோவிலடியில் உள்ள ஒரு வீட்டின் மேல் விழ்ந்து வெடித்ததில் வீடு பலத்த சேதமடைந்தது.

இதை அடுத்து இப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தனர்.

மோதலின் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் 9 மணிக்கு செய்தி

கொழும்பு, ஜூலை 2

இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து ரூபவாஹினியில் தினமும் ஆங்கிலச் செய்தி இரவு 9 மணிக்கு மீண்டும் வாசிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மாணவர் பாதுகாப்பு: தீர்க்கமான முடிவு தேவை

### மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள், உடனடியாக, மேலும் தாமதிக்காமல், ஒன்று கூடி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் — என்று மாணவர் ஒன்றியச் செயலாளர் ரி. ராஜேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சுற்றிவளைப்புகளின்போது மாணவர்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, அவர்கள் பின்னர் சுட்டுக் கொல்லப்படுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொதுவிடங்களில் வைத்து மாணவர்கள் உட்பட இளைஞர்கள் சுய விருப்பமின்றிக் கடத்தப்படுகின்றனர்.

பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் காரணத்தினைப் புரிந்து கொள்ளாதது போல், இப் போராட்டமானது கல்வியை பாழடிக்கும் நோக்கோடு செய்யப்படுவது, எனக் கூறி எமது

(8 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தடுப்பூசி பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 107, கலைமகள் வீதி, கல்வியங்காடு. (11420)

Brown வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் Broilers குஞ்சுகளும் சேவல் குஞ்சுகளும் கைவசம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க LUCKY FARM HOUSE மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. தொகையாகப் பெறுவோருக்கு விசேட சலுகையுண்டு. (11419)

மானிப்பாயில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வீட்டுடன் தொடர்பு: Mrs Y. Seladurai, நாவலடி ஒழுங்கை, மானிப்பாய். (சி/2972)

மாவிட்டபுரம் தம்பகதம்பி வீதி, பளை, தெல்லிப்பளையில் உள்ள 5½ பரப்புக் காணியில் 5 அறை குசினியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. பொன்னுத்துரை சரவச்சை அளவெட்டிவடக்கு அளவெட்டி. (சி/2989)

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்துக்கு மிக அண்மையில் உள்ள சஞ்சியன் தோட்டக்காணி 24 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: எஸ். பொன்னுத்துரை, கரவச்சை, அளவெட்டிவடக்கு, அளவெட்டி. (சி/2990)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் சகல மின்சர உபகரணங்கள் Bicycle Chaly குத்துவிளக்குகள் விற்பனைக்கு உண்டு. தினமும் காலை 9-00 மணி முதல் மாலை 6-00 மணி வரை பார்வையிடலாம். 343, பருத்தித்துறை வீதி அரசடி, நல்லூர். (11409)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உயிராகவோ சுத்தம் செய்தோ பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாக கொள்வனவு செய்வோர்க்கு விலைக் கழிவு உண்டு. தொடர்பு கொள்க. இல. 19. இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/2987)

## SAAI RAAM

பாவித்த அலுமாரி கட்டில் கண்ணடி, மேசை, ரெக்சின் செற்றி, Fan National, 2 IN 1 5030 T. V. மலிவு விலையில்; SAAI RAAM, 3ஆம் கட்டை, பருத்தித்துறைவீதி, கல்வியன் காடு. (11383)

## WANTED

Wanted Suitable bride groom between 32 - 36 for doctor bride. Apply with horoscope No 555 C/o Uthayan, Jaffna. (3005)

## பிரத்தியேக கல்வி

O/L 89 கணிதம், ஆங்கிலம் விசேட கவனிப்புடன் B. Sc. (Cey) பட்டதாரியால் கற்பிக்கப்படும். மூன்று மாதத்திற்குள் முழுப்பாடத் திட்டமும் கவனிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (1031)

## தேவை

பங்கு விகிதத்தில் றெக்கோடிங் ஸ்தாபனத்தில் தொழில் புரிவதற்கு 5 வருடம் றெக்கோடிங் செய்த அனுபவமுள்ளவர்கள் தேவை. ஆண்கள் பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு:- விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) இல 100 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1032)

மடப்படி மண்டபவேலை சகலதும் பொறுப்பாக பார்க்கக் கூடிய உதவிப் பூசகர் தேவை. போதிய வேதனம் கொடுக்கப்படும். உடன்நேரில் வரவும் தர்மகர்த்தா: துர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி. (11405)

## ஜோதிடம்

இன்று வியாழன் மாற்றம் ரூபா 4/- இலங்கை ராசியைச் சனி பகை ராகுகேதுக்கள் நோக்குவதால் நாட்டில் வன்முறைகளும், இரத்தக்களரிகளும் நூலாசிரியர் (ஆத்மஜோதி) Prof சத்தியதாஸன் (Mech. Eng, Elec. Eng) விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை. (1024)

இன்று வியாழ மாற்றம். ரூபா 4/- எங்கும் கிடைக்கும் இலங்கைராசி கும்பத்தைச் சனி, ராகு, கேது பார்வைகளால், வன்செயல்களால் இரத்தக்களரிகளும் ஏற்படும். நூலாசிரியர் (ஆத்மஜோதி தத்துவ ஞானம்) சத்தியதாஸன் விநியோகஸ்தர்கள் கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி. (11398)

## தவறிவிட்டது

சதாசிவம் கானமூர்த்தி ஆகிய எனது அடையாள அட்டை (453310680 V) நாச்சிமார் கோவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 41A, சிவப்பிரகாசம் ரோட், நாச்சிமார்கோவிலடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11411)

628040850 V இலக்கமுடைய அடையாளஅட்டையை தவறவிட்டுள்ளேன்; தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் திருமகள் சோமசுந்தரம் வட்டு கிழக்கு, சித்தங்கேணி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன். நன்றி. (1034)

## மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண வேளாளர் 28 வயது ஆசிரியருக்கும் 35 வயது குற்றமுள்ள வங்கியாளருக்கும் 28 வயது ரெக்னிசனுக்கும் 29 வயது சவூதி மணமகனுக்கும் 28 வயது வாணிபரின மணமகனுக்கும் 38 வயது கோவியரின வங்கியாளருக்கு ஆசிரியையும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11418)

## INDIVIDUAL CLASS FOR MATHS

வீடுகளுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் ஆண்டு 9, 10, 11 ஆகிய மாணவர்களுக்கு கணிதம் கற்பிக்கப்படும். தொடர்பு கொள்க PASCAL ACADEMY, 217/ Aஆஸ்பத்திரி வீதி, (றெயில்வே கடவைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (11417)

# புற்றளையில் தேடுதல்

வடமராட்சி, ஜூலை 2

புற்றளைப்பகுதியில் வெள்ளியன்று சுற்றிவளைப்பும் தேடுதலும் இடம்பெற்றன.

இதேவேளை மந்திகை வைத்தியசாலையின் தெற்குப் பக்கமாக கருசம்பன் தோட்டத்தின் ஊடாக கனரக வாகனங்கள் தம்பசிட்டிப் பக்கமாகச் சென்றன. அதனைத்தொடர்ந்து மக்கள் மத்தியில் பீதி நிலவியது.

வெள்ளியன்றும் பருத்தித்துறை. புலோலி, நெல்லியடிப் பகுதிகளில் இயல்புநிலை திரும்பவில்லை. வியாழக்கிழமை இப்பகுதிகள் உட்பட வடமராட்சி எங்கும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. (அ-160)

# கி. மு. சங்க புனரமைப்பு

சரவெட்டி, ஜூலை 2

சரவெட்டி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஜயாத்துரையின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புனரமைக்கப்பட்டது

கரவெட்டி பிரதேசசபை நிர்வாக உத்தியோகத்தர் திரு க, சுப்பிரமணியக் குருக்கள், கரவெட்டி கிழக்கு கிராம சேவையாளர் திரு. கா. தில்லையம்பலம் ஆகியோர் புனரமைப்பு கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். [ச-70]

# போதுமான அளவு மா உண்டு; விலை அதிகரிப்பு அவசியமற்றது

## உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி உயர் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாண மாவட்டத்திற்குப் போதுமான அளவு மா திருமலையில் இருந்து வந்து சேர்ந்துள்ளது. ஆகையால் மாவின் விலையை அதிகரித்து விற்க வேண்டிய அவசியமே இல்லை.

இப்படிக்கூறுகிறார் உணவுக் கட்டுப்பாட்டு பிரதிப் பணிப்பாளர் திரு. வி. நடேசபிள்ளை.

கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகியன தொடர்பாக வினவியபோது அவர் உதயனுக்கு தெரிவித்ததாவது:-

ப. நோ. கூ. சங்கங்களின் 300 லொறிகளுக்கு, திருமலையில் இருந்து மா எடுத்துவர அனுமதி வழங்கியிருந்தோம். இதன்படி 3,000 தொன் மா இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு ஒரு வாரத்துக்கு 1,000 தொன் மா தேவையாக உள்ளது.

இரு வாரங்களில் மூவாயிரம் தொன் மா வந்து சேர்ந்ததால், தட்டுப்பாடு நிலவ வாய்ப்பு இல்லை. மேலதிகமாக இருப்பு இருக்க வேண்டும்.

ஒரு லொறிக்கு நாம் 5,250 ரூபா போக்குவரத்துச் செலவாக வழங்குகிறோம்.

ஆனால் ப. நோ. கூ. சங்கங்கள் ஒரு லொறிக்கு 6000 ரூபா வீதம் கொடுக்கிறார்கள்.

நாட்டு நிலைமையை உத்தேசித்து ப. நோ. கூ. சங்கங்கள் கூடுதல் லாபத்தை எதிர்பாராது எட்டு ரூபாவுக்கு மாவை விற்க முடியும்;

— இப்படி அவர் தெரிவித்தார். (அ-?)

# சைவச் சூழ்நிலையில் கல்விபோதனை; அதற்குதவுவது எல்லோரதும் கடமை

## வட்டுக்கோட்டை சைவமாநாட்டில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 02

''இன்றைய காலகட்டத்தில் திகழும் அனர்த்தங்களுக்கு சைவசமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல், தீர்வு தரும் இதற்கு ஆதாரமான கல்வியை சைவச் சூழ்நிலையில் எமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் ஆசிரியர்கள், அதிகாரிகள், பெற்றோர்களின் கடமையாகும்.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் மகாவித்தியாலயத்தில் அசவூர் கலாநிலைய ஆதரவில் நடந்த சைவமாநாட்டிற்கு தலைமை வகித்து பேசிய கலாநிலைய முதல்வரும் முன்னாள் அதிபருமான திரு. க. கயிலாயநாதன் தெரிவித்தார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

அங்கும் இங்குமாக நடைபெறும் மதமாற்றத்திற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும். இதற்கு எமது பிள்ளைகளிடையே சைவாசாரம் நிலவுதலும் திருமுறை ஓதுதலும் பரிகாரம் என்று ஒரு சைவ அறிஞர் கூறியிருக்கிறார். ஆனால் இவை எவ்வகையிலும் இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்காது.

''சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று வயிற்றை நிரப்பிய பின்னரே மதம் பற்றிய பேச்சு ஏழைகளுக்கு கல்விக்கான உபகரணங்களையேனும் உதவவேண்டும், எமது சைவப்பிள்ளைகளை நாம் ஆதரிக்காவிட்டால் வறுமை நிலையில் நேசக்கரம் நீட்டும் வேற்று மதத்தை அவர்கள் நாடுவது தவிர்க்கமுடியாதது இதற்கு நாம் எம்மையே நொந்துகொள்ள வேண்டும். சைவமக்கள் ஒன்று திரண்டு குறைகளை நிறைவுசெய்ய வேண்டும் —என்று தெரிவித்தார்.

மாநாட்டைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன், ''சைவ மதம் மிகவும் தொன்மையானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகத்தைத் தழுவியது. இச்செம்மை மதத்தைக் கட்டிக்காக்கவேண்டியது சைவன் ஒவ்வொருவரின் கடமை. ஆனால் இன்று ஆறுமுக நாவலர் எழுதிய சைவவினாவிடை பாலபாடங்கள் போன்ற நூல்கள் கற்பிக்கப் பெறுவதில்லை எமது சைவர் கல்வியில் மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பண்ணிசைப்புலவர் திரு. வே. சிவஞானம் அவர்களின் திருமுறை அரங்கு நடைபெற்றது.

காலை நிகழ்ச்சிகளின் இறுதிக் கட்டமாக இன்றுள்ள சைவ நடைமுறைகளின் திருத்தம் அவசியம் என்னும் பொருள்பற்றி பட்டிமன்றம் நடைபெற்றது. கலாநிதி சி. க. சிற்றம்பலம் பட்டிமன்றத்திற்கு நடுவராகப் பணிபுரிந்தார்.

அவர் பட்டிமன்றத்தைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் எமது ஆலயங்களில் சைவமதக் கோட்பாடுகளுக்கு முரணான பல மூடச் செயல்கள் இடம்பெறுகின்றன. எமது மதத்தில் மாற்றத்தை நாம் கோரவில்லை. ஆனால் திருத்தமே தேவை என்றார்.

பண்டிதர் திரு. க. மயில்வாகனம், புலவர் திரு. க. தேவதாசன் ஆகியோர் தலைப்பை ஒட்டியும், பண்டிதை திருவாட்டி பொன். பாக்கியம் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருவாட்டி நா. செல்வநாயகம் ஆகியோர் வெட்டியும் வாதாடினர்,

பிற்பகல் நிகழ்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருவாட்டி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 'பெரிய புராணம் காட்டும் பெண்கள்' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்.

அவர் பேசுகையில், ''அடியார் எல்லோரும் பெண்ணினத்தின் ஆதரவுடனேயே தொண்டுகள் செய்தனர். ஒரு கஸ்தூரிபாய் இன்றேல் ஒரு மகாத்மா இருந்திருக்க முடியாது. திலகவதியார், நாவுக்கரசரையும். மங்கையர்க்கரசியார் ஓர் அரசையும் கட்டிக் காத்தனர்'' என்று தெரிவித்தார்.

இசை, நாடக நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. (அ)

# வீதியோர மரங்களை வெட்டுவது இறைவனுக்குச் செய்யும்துரோகம்

## சிரமதான வைபவத்தில் உரை

'வீதியோரங்களிலும், ஏனைய பொது இடங்களிலும் உள்ள மரங்களை வெட்டி வீழ்த்தி எமது தேவைகளுக்காக பயன் படுத்துவது ஓர் முறைகேடான செயலாகும். குறிப்பாக இக்காலத்தில் மரப்பொருள்களை கண்டபடி உருவாக்குவதற்கு வீதியோரங்களிலுள்ளபாரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. இவ்வாறான செயலை இறைவன் கூட ஏற்றுக் கொள்ள மாட்டான். இயற்கையின் செல்வமானதும், இறைவனின் கொடையானதுமான மரங்களை வெட்டி தனக்காக பயன்படுத்துவதை இறைவன் விரும்பமாட்டான்.

சுருவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சிரமதான நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில் திரு. சு. சிவசம்பு இப்படி தெரிவித்தார்.

மேற்படி ஆலய முன்றலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அடியார்கள் பலர் கலந்து கொண்டனர்.

மரங்களை வெட்டுவதால் மழைவீழ்ச்சி குறையும், மழைவீழ்ச்சி குறைந்தால் நாம் இறைவனைக் குறைசாட்டக் கூடாது. மேலும் வீதிகளில் உள்ள நிழல் மரங்களை வெட்டுவதால் பாதயாத்திரையை மேற்கொள்ளும் இறையடியார்கள் துன்பமுறுகின்றனர்

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-16)

## உணவுமுத்திரை

உணவு முத்திரைக்கான விண்ணப்பங்களை நிரப்பும்போது பிறந்த திகதியைக் குறிப்பிடாது வயதைமட்டும் குறிப்பிட்டுள்ளதால் ரூபா 30க்குப் பதிலாக ரூபா15 பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

எட்டு வயதுக்கு உட்பட்டோர்க்கு உணவு முத்திரை இவ்வாறு ... ... ... டுள்ளது. (ச-72)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு பொன்னம்பலம் பத்மநாதன்

தோற்றம்: 04 - 09 - 1948

மறைவு: 27 - 06 - 1984

திதி: 02 - 07 - 1989

ஆண்டுகள் ஐந்து
சென்றாலும் ஆறவில்லை
நம் சோகம்
ஆறாய் நீர் சொரிந்து
நிற்கின்றோம்
உம் பிரிவால்;
பண்புடன் வளர்த்தீரே
பாசமுடன் காத்தீரே
இன்று சொல்லாமற்
சென்று விட்டீர்
தூரதேசம் நம்மைவிட்டு!
உங்கள் ஆத்மா சாந்தி
அடைய இறைவனை
மன்றாடுகின்றோம்.

உங்கள் பிரிவால்
துயருறும்
அன்பு மனைவி, மக்கள்,
தாய், தந்தை, சகோதரர்,
மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனி.

'பத்ம இல்லம்'
இறங்கனியவளவு,
காங்கேசன்துறை. [11363]

# சட்டவிரோத மின்பாவனையால் 21 லட்சம் ரூபா நஷ்டம்

## பண்டத்தரிப்பு பிரதேச உப அலுவலகத்துக்கு

பண்டத்தரிப்பு, ஜூலை 02

மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பண்டத்தரிப்பு பட்டின பிரதேச உப அலுவலகம் 35 லட்சம் ரூபாவை மின்கட்டண நிலுவைப்பணமாகக்கட்டவேண்டி இருக்கிறது. இத்தொகையில் 13 லட்சத்து 52 ஆயிரம் ரூபா மின்பாவனையாளரிடமிருந்து பெறப்படவேண்டியது. சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களால்ஏற்படுத்தப்பட்ட மின் வரிப்பணம் 21 லட்சம் எனக் கூறப்படுகிறது

அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன் படுத்தப்பட வேண்டிய பொது மக்களின் வரிப்பணத்தில் இருந்தே இத்தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது என பிரதேச உப அலுவலக நிர்வாகி ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார். (ச-120)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. கதிரேசு துரைஐயா

மலர்வு: 14-10-1913 உதிர்வு: 02-06-1989

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்: 02-07-1989 (இன்று) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சொர்ணவடலி
பூனறிலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (1116)

## ஓராண்டுகண்ணீர் அஞ்சலி



செல்வி கலாமோகினி [கலா] சின்னராசா

தாயின் மடியில்: 19 - 6 - 1964

அண்ணன் அழைப்பில்: 13 - 7 - 1988

திதி: 2. 7. 1989

ஆசை மகளே அன்பின் சகோதரியே!
பாசங்கொண்ட குடும்பத்திற்கு
பரிசுப் பொருளாம் நீ இருந்தாய்
நீங்காத நினைவலைகள் நெஞ்சை
விட்டுப் போகாதம்மா!
ஆண்டு பலவானாலும் அழுது நெஞ்சம் ஓயாது
அன்னையுள்ளம் தவிக்குதம்மா!......
ஆறுதல் கூற நீ இல்லாமல் தந்தை நெஞ்சம்
வெடிக்குதம்மா!
உன் நினைவலைகள்மாறாமல் சோதர சோதரிகளும்
சோர்ந்து விட்டார்!
உன் சொந்தம் விட்டுப் போனதென்று எம் நினைவை
இருளாக்கி இதயத்தைப் புண்ணாக்கிக் காலனவன்
கரம்பற்றிக் காற்றோடு கலந்தாயோ?
எண்ண எண்ண எம் இதயம்
இடி விழுந்து சிதறுதடி - எப்பிறப்பில்
இனி நாங்கள் உன் முகத்தைக் காண்பதம்மா?

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
அத்தான், மகன் அகிலன், நண்பிகள்;

நா. சின்னராஜா,
பெற்றோல் செற்றடி,
மானிப்பாய். (1114)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ இணுவில் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் ★


திருத்தேர் ஏறி வரும்
இணுவைக் கந்தன்
அருள்பாலிக்க
வாழ்த்துகின்றோம்

கணேசன் றெக்ஸ்ரைல்ஸ்
& மில்ஸ் லிமிட்டெட்
தாவடி வடக்கு,
கொக்குவில்.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

கணேசன்
ரேடிங் கொம்பனி
கந்தசுவாமி கோயில் சந்தி,
காங்கேசன் துறை வீதி,
இணுவில்.

லிங்கம் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

விவசாயிகளே!
உங்களுக்குத் தேவையான சகல விதமான
★ கிருமிநாசினி வகைகளுக்கும்
★ உர வகைகளுக்கும் — மற்றும்
★ ஸ்பிறேயர் வகைகளுக்கும்
இன்றே நாட வேண்டிய இடம்;
பிள்ளையார்
விவசாய சேவை நிலையம்
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

க. பாலசுப்பிரமணியம்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

டென்சி படப்பிடிப்பாளர் &
பான்ஸி ரேடேர்ஸ்
Hayleys Foto Print Agent
T. R. J Group.
கே. கே. எஸ் வீதி.
இணுவில்.

Expo Video Complex
இல 7. கே. கே. எஸ் வீதி.
கோண்டாவில்.

மூவிரு முகங்கள் போற்றி!
முகம் பொழி கருணை போற்றி!
சாந்தி றெக்ஸ்ரைல்
157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஏறுருந்துஇக்க நின்ற!
ஈராறு தோள்கள் போற்றி!
பெஷன் ஹவுஸ்
65, கே. கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி!
சி. க. துரைசிங்கம் J. P.
நியூ லங்கா பாம்
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.


## பசிக்கு உணவும் தங்க இடமும் கேட்டு குடிகொண்ட இணுவைக் கந்தன்

இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அமைந்த இணுவில் கிராமத்தில் மேற்கு வீதியில் தெற்கே பரராஜ சேகரமன்னனால் வழிபாடு செய்துவந்த விநாயகர் ஆலயமும் வடக்கே செகராஜ சேகர வைத்திய பூபதியால் வழிபாடு செய்து துதித்த விநாயகர் ஆலயத்திற்கும் நடுவே அமைந்திருக்கும் ஆலயமாகும்.

### கர்ணபரம்பரை வரலாறு

சைவ வேளாளர் மரபில் உதித்த குழந்தையர் வேலாயுதர் தமது வயோதிப காலத்தில் தமது வெற்றிலைத் தோட்டத்தில் சிறு குடிசையில் வாழ்ந்து வந்தார். அவர் நல்லூர் முருகனைச் சென்று வழிபட இயலாத காரணத்தினால் மிகவும் கவலையுற்றவராகி முருகக்கடவுளை நினைத்து தமது குடிசையில் ஆழ்ந்திருக்கும் போது முருகப்பெருமான் நடுவயதுப் பாலசனாக கனவில் தோன்றி நான் இந்தியாவில் சுவாமி மலையில் இருந்து வருகின்றேன் எனக்கு பசிக்கிறது பசிக்கு உணவும் வேண்டும், எனக்கு தங்குவதற்கு இடமும் வேண்டும் என திருவாக்குக் கேட்டது. அப்போதுவேலாயுதர் தமது வறுமையை எடுத்துக் கூறி பனம்பழம் தான் என் வசம் இப்போது இருக்கின்றது சாப்பிடுங்கள் என்று கூறி பனம் பழம் எடுப்பதற்காக எழுந்தபோது நித்திரை விழித்தார். விழித்ததும் பனம்பழம் கேட்ட பிள்ளையை காணாததால் முருக பக்தனாகிய வேலாயுதர் தான் கண்ட கனவை நினைத்து மீண்டும் கண்ணுறங்கினார். மீண்டும் கனவில் முருகன் தோன்றி அவருடைய வெற்றிலைத் தோட்டத்தில் வேலியில் நின்ற நொச்சித் தடியை முறித்து தான் நின்ற இடத்தில் ஊன்றி இவ் உலகமுள்ளவும் தான் இவ்விடத்தை விட்டுப் போகமாட்டேன் என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

அவ்விடத்திலே வேலாயுதர் அவ் நொச்சி மரத்தை பாதுகாத்து நொச்சி மரத்தையே முருகனாக வணங்கி வந்தார். அதனால் இணுவில் கந்தனை நொச்சியம்பதி எனவும் அழைப்பர்.

இத் திருவுருவத்தைக் கோயில் அமைந்திருக்கும் இடத்திலேயே வார்க்க வேண்டும் என கரு அமைத்து வளர்த்த பூசகரின் அபிலாஷையை நிறைவேற்றப் பல முறை முயற்சித்தும் முயற்சி திருவினை அடையாமல் இருப்பதைக் கண்டுணர்ந்த அந்தணப்பெருமகன் நாற்பத்தெட்டு நாள் விரதமிருந்து தமது மனைவியின் கழுத்திலிருந்த பொற்தாலியையும் தாலியோடு சேர்ந்த பொற்கயிற்றையும் சேர்த்து ஒன்றாக வார்த்தபின்



ஆறுமுகப் பெருமானின் திருவுருவம் நிறைவெய்தியது எனப் பரம்பரை பரம்பரையாக இவ்வூர்ப் பழங்குடி மக்கள் கூறி வருகிறார்கள்.

### வழிபட்டுப் பயன் பெற்றோர்

இணுவில் கந்தனை வணங்கி இணுவிலில் வைத்தியத் தொண்டாற்றிய இணுவிலின் தவக் கொழுந்தாக விளங்கிய பெரியசன்னாசியாரிடம் நோய் தீர்க்க வரும் மக்கள் கந்தனை வணங்கிசன்னாசியாரிடம் அருள் பிரசாதம் பெற்று கோயிலின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் காணிக்கை செலுத்தி பல வழிகளிலும் தொண்டாற்றி புனருத்தாரணத்தில் பங்குகொண்டார்கள். அக்காலத்தில் நாகபட்டணத்திலிருந்து காங்கேசன்துறைக்கு மரக்கலங்கள் கொண்டு வியாபாரம் செய்யும் வழக்கம் வர்த்தகர்களிடையே இருந்து வந்தது. அவ்வர்த்தகர் ஒருவர் இந்தியாவின் தஞ்சாவூரைப் பிறப்


இணுவில் கந்தசாமி கோவில்
இடைக்கால தர்மகர்த்தா சபை


பிடமாகக் கொண்டவர். இஸ்லாம் மதத்தைச் சோந்த மரக்காயர் என்ற இவர் தீராத நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்.

தமது மரக்கலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஊடாக இணுவிலில் குடிகொண்ட முருகன் ஆலயத்தில் தொண்டு செய்யும் சன்னாசியார் என்பவரின் பணி ஆற்றும் தன்மையை அறிந்து ஊருக்கு வந்து முருகப்பெருமானை வழிபட்டு சன்னாசியாரின் அருள பிரசாதம் பெற்று தனக்குள்ள நோய்ப்பிணியை நீக்கி காணிக்கையாக என்ன செலுத்த வேண்டும் என்று சன்னாசியாரிடம் கேட்டார்.

அதற்கு சன்னாசியார் எமது இணுவில் கந்தனுக்கு திருமஞ்சம் அமைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இந்தியாவில் இருந்து சிற்பாசிரியர்களை வருவித்து உதவுமாறு வேண்டிக் கொண்டார். மரக்காயரும் அதற்கு இணங்கி தஞ்சாவூரிலிருந்து சிற்பாசிரியர்களை வரவழைத்துக் கொடுத்து அவர்களுக்குரிய செலவையும் தான் ஏற்றுக் கொண்டார். அதன்பயனாக யாழ்ப்பாணத்தில் வாழும் பல பெரு மக்களின் உதவியுடன் அதற்கு வேண்டிய மரத்தையும் மற்றும் தேவையான பொருட்களையும் பெற்று எங்கு சென்றாலும் காணமுடியாத அழகு மிக்கதுமான கலைச்சிறப்பு மிக்கதுமான திருமஞ்சத்தை உருவாக்கி ... ஒரு நூற்றாண்டை அண்மித்தும் கம்பீரமாக ...

...பலர்கள் உளர், அவரைப் பின் தொடர்ந்து அவருடைய பிள்ளைகளும் அயலவர்களும் முருகக் கடவுளுக்கு பொங்கல், பூசைகள் செய்து வரலாயினர். மேலும் அவருடைய பிள்ளைகளும் உறவினர்களும், ஊரவர்கள் உதவியுடனும் அயல் கிராமங்களாகிய, கோண்டாவில், தாவடி, உடுவில் மக்களின் உதவியுடனும் கற்கோவிலாகக் கட்டிவித்து வேல், பிரதிஷ்டா வளம் செய்து அந்தண பெருமக்களை அமர்த்தி நித்திய நைமித்திய பூசைகள் செய்வித்து வந்தார்கள். முருகனுடைய தலவிருட்சமாக நொச்சியும், தீர்த்தமாக வெற்றிலைத் தோட்டத்திற்கு நீர்பாய்ச்சிய கிணறும் இன்றும் நிலை பெற்று விளங்குகிறது.

வடபுறத்தில் அமைந்துள்ள க்ஷேஸ்டதிரபாலராகிய விளாத்தியடி வைரவ மூர்த்தியினுடைய அருளும் ஒருவாறாக அமைந்து காணப்படுகிறது. இவற்றில் மிகவும் சிறப்பாக இன்று விளங்குவது வைரவ வாசலில் இருக்கும் முருகனின் தீர்த்தக் கிணறு ஆகும். இத் தீர்த்தக் கிணற்றில் தொன்று தொட்டு இன்றுவரை நாலா பக்கங்களிலும் இருந்து மக்கள் வந்து நீராடி குங்கள் தீராத நோய்களைத் தீர்க்கும் அருள் மருந்தாக இன்று பாவிக்கின்றார்கள்.

அடுத்து இங்கு காணப்படும் ஆறுமுகப் பெருமானின் திருவுருவம் சம்பந்தமுடையதாக ... தில் கொலுவிருக்கும் சிறப்பான காட்சியாகும்.

துடன் வருடத்தில் இருமுறை ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் பவனி வருவது இக்கோயிலில் சிறப்பு மிக்கது ஒன்றாகும்.

அடுத்து சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இணுவிலை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திய பூபதி முத்து நாகலிங்கம் தமக்கு பிள்ளைப்பேறு இல்லாதகாரணத்தினால் முருகனை வேண்டி இராஜகோபுரத்தையும் இரதோற்சவத்தில் அன்று ஆறுமுகபெருமான் இளைப்பாறுவதற்கு மடமும் அமைத்தார். அதன் பயனாக அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது அவர்தான் பிற்காலத்தில் இற்றைக்கு கால்நூற்றாண்டுகாலத்திற்கு முன்பு வைத்திய பூபதியாக விளங்கிய அண்ணாமலை ஆவார்.

அண்மைக் காலத்தில் ஊரவர்களினும் அயல்கிராம மக்களினதும் முயற்சியினால் சைவ சமய வேதாகமப்படி நித்திய நைமித்திய பூசைகள், உற்சவங்கள், மகோற்சவங்கள் என்பன தொடர்ந்தும் நடைபெற்று இன்றும் புதுப்பொலிவுற்று வருவது காணக் கூடியதாக இருக்கிறது.


திருத்தேர் ஏறி வரும்
இணுவைக் கந்தன்
அருள்பெற
வாழ்த்துகின்றோம்

சுந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!
"அல்பா"
மரக்கறி எண்ணெய்
ஏக இறக்குமதியாளரும்,
B. C. C, J. L M, Bata
Everready Battereis
இவை அனைத்திற்கும்
வடபகுதி ஏக விநியோகஸ்தர்கள்:
சி. சின்னத்துரை அன்
பிறதர்ஸ்,
23, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
த. பெ. இல: 101
தொலைபேசி: 22703, 22183.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய், வருவாய் அருள்வாய் குகனே!
● குறைந்த சலாரில் எண்ணெய்
வடித்துப் பெற்றுக்கொள்ள
மல்ரி ஒயில் இண்டஸ்ரீஸ்
லிமிட்டெட்
OIL MILLERS
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(இணுவில் ஆஸ்பத்திரி முன்புறம்)

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
JANARDEN'S
உயர்ரக உருக்கு (Steel) தளபாட
உற்பத்தியின் முன்னோடிகள்!
புதிய அமைப்பில் உறுதியும்,
உத்தரவாதமும் கொண்ட வீடு
காரியாலய (Office) தளபாடங்களுக்கு
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:
ஜெனட்டென்ஸ்
கே. கே. எஸ். வீதி.
இணுவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# இங்கிலாந்து பல்கலைக்கழக அணி ஆஸ்திரேலியாவிடம் தோல்வி

ஒக்ஸ்போர்ட், (இங்கிலாந்து) ஜூலை 1

இங்கிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டிய ஆஸ்திரேலிய அணி புதன்கிழமை அன்று நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணியை 99 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

ஆரம்பத்தில் பெய்த மழையின் காரணமாகப் போட்டி 35 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 215 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டிக்கு அணித் தலைவராகக் கடமையாற்றிய ஜெப் மார்ஸ் 74 ஓட்டங்களைப் பெற்றார். இவர் பெற்ற 74 ஓட்டங்களில் பல்கலைக்கழகங்கள் அணி வீரர் மைக் அத்தெட்டனின் ஒரு ஓவரில் அடுத்தடுத்துப் பெற்ற 3 சிக்சர்களும் அடங்கியிருந்தன. டொம் மூடி 28 பந்துகளை மட்டும் சந்தித்து 4 பாரிய சிக்சர்களை உள்ளடக்கிய 47 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

வலெட்டா 42, மார்க் டெய்லர் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பைமன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணி குறிப்பிட்ட ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

எஸ். ஜேம்ஸ் ஆட்டம் இழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்றார். ரி. ஹேறான்ஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (இ-6)

## விம்பிள்டன் டென்னிஸ்

லண்டன், ஜூலை 1

இங்கிலாந்தில் நடைபெறும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பெண்களுக்கான முதலாவது சுற்றுப் போட்டியில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்டெபிகிறுப், அமெரிக்காவைச் சேர்ந்த மார்ட்டினா நவட்டிலோவா, ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த கப்றீலா சபாட்டினி, அமெரிக்காவைச் சேர்ந்த சீனா கரிசன் ஆகியோர் வெற்றியீட்டினர்.

எனினும் இரண்டாவது சுற்றில் கப்றீலா சபாட்டினி, சீனா கரிசன் ஆகியோர் எதிர்பாராதவிதமாகத் தோற்றுப் போய்விட்டனர்.

ஆண்களுக்கான இரண்டாவது சுற்றுப்போட்டியில் செக்கோசிலவாக்கிய வீரர் இவான் லெண்டில் வெற்றியீட்டினார். இருமுறை விம்பிள்டன் சம்பியனாகத் திகழ்ந்த அமெரிக்க வீரர் ஜிமிகோனர்ஸ் தோல்வியைத் தழுவிக்கொண்டார்.

இந்திய வீரர்களான ரமேஸ் கிருஷ்ணன், தீவுன் அலி ஆகியோர் முதலாவதுசுற்றிலேயே தோற்றுப்போயினர்.

எதிர்வரும் 6ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆண்கள் பெண்களுக்கான ஒன்றையர் அரை இறுதி ஆட்டங்களையும் இறுதி ஆட்டங்களையும் தூரதர்ஷன் நேரடியாக ஒளிபரப்புச்செய்யவுள்ளது. (இ-6)

## சிறந்த கிரிக்கெட் வீரராக ராமன் தெரிவு

சென்னை, ஜூலை 2

இந்திய அணி வீரரும தமிழ் நாட்டைச் சேர்ந்தவருமான வா. ராமன் இவ்வருடத்தின் சிறந்த கிரிக்கெட் வீரராகத் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய அணியின் சார்பாக மூன்று டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இவர் ஒரு சிறந்த வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் வலது கைச் சுழல்ப்பந்து வீச்சாளருமாவார்.

இவ்வருடம் நடைபெற்ற றஞ்சித் கிண்ணத்துக்கான போட்டியில் அபாரமாக ஆடி ஒரு மும்மைச்சதத்தினையும் (300), இரு இரட்டைச்சதங்களையும் உள்ளடக்கிய 1018 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பெற்ற இந்த ஓட்ட எண்ணிக்கையின் மூலம் 44 ஆண்டு காலமாக முறியடிக்கப்படாதிருந்த றசிமோடி என்பவருடைய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் வருடாந்தவிழாவின்போது 'பிஷூராம் மெட்ஹி' விருது இவருக்கு வழங்கப்படவுள்ளது. (இ-6)



யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற வைபவத்தில் ''அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83'' பாதிக்கப்பட்டவர்களுக்கு தையல் மெஷின் வழங்குவதை முதலாம் படத்தில் காணலாம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களை இரண்டாவது படத்தில் காணலாம். (இ – 10)

## சுவரொட்டிப் போட்டியில் பரிசு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் வியோ கழகத்தினால் நடத்தப்பட்ட போதைப் பொருள்எதிர்ப்புச் சுவரொட்டிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, கூடிய சுவரொட்டிகள் அனுப்பியதற்காக இரண்டாம் இடத்தையும், ஒரு முதற் பரிசையும், ஒரு இரண்டாம் பரிசையும், ஒரு மூன்றும் பரிசையும், 6 ஆறுதல் பரிசுகளையும் பெற்றது. (ச)

''அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 83''

# கலவரங்கள் தொடர்வதனால் நிவாரணமும் தொடர்கிறது

## உதவி வழங்கும் வைபவத்தில்உரை

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழ்ப் பகுதியில் கலவரங்கள் தொடர்ந்து இடம்பெறுவதால் நிவாரணம் வழங்குவதும் தொடர்கிறது.

இப்படிக் கூறினார் முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கிட்டினர்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு சுய வேலை வாய்ப்பை அளிக்கும் வகையில் உதவிகளை வழங்கிய வைபவத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிதியத்தின் தலைவர் திரு. எஸ். சிவஞானம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் மேலும் [illegible] கூறியதாவது:

''12இலட்சம்ரூபா பெறுமதியான உதவிகளை இன்று நாம் வழங்குகிறோம். நொருட் என்னும் அமைப்பு வழங்கிய உதவியில் இருந்துதான் இப்பொருட்களை வழங்குகிறோம்.

83 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து கலவரங்கள் இடம் பெற்றதால் நிவாரணம் வழங்குவதும் தொடர்கிறது.

அரசநிவாரணத்துக்கும், எம் நிவாரணத்துக்கும் இடையில் காலக்கெடுவில் வித்தியாசம் உண்டு. நாம் உடனடி நிவாரணமாகவே இவ்வுதவிகளை வழங்குகிறோம். மக்கள் இவற்றை [illegible] [illegible] படுத்த உதவ வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

நிதியத்தின் தலைவர் திரு. எஸ். சிவஞானம் பேசுகையில் கூறியதாவது:-

''நோர்வே நாட்டவர்கள் தான் எமக்கு கூடுதல் உதவிகளை வழங்கி வருகிறார்கள். மக்கள் படும் துன்பங்களை உணர்ந்து அவர்கள் உதவுகிறார்கள். அவ்வுதவிகளை மக்கள் வீணாக்காமல் வாழ்வு சிறக்க உதவ வேண்டும். அத்துடன் எமக்கு உதவும் மக்களின் மனம் நிறைவு பெற முயற்சிக்கவேண்டும்.

எம் நிதியத்தில் விண்ணப்பம் கொடுத்த வர்களுக்கு படிப்படியாக உதவுவோம்.

இப்படி அவர் கூறினார்.

வை. எம். சி. ஏ. அமைப்பைச்சேர்ந்த திருமதி அரியரத்தினமும் உரையாற்றினார். (இ – 3)


## அருள் மாதர் வைத்தியசாலை
(முறிவு, நெரிவு சிகிச்சை நிலையம்)

50 ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த மாதர் வைத்திய நிலையம் தொடர்ந்தும் அதே இடத்தில் சேவையில் உள்ளது.

உடன், பழைய நோவுகளுக்கும், விரணங்களுக்கும் தரம் மிக்க எண்ணெய் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கிளை நிறுவனம் வேறெங்குமில்லை.

இல. 45, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2984]

## QUANTITY SURVEYING 627
CITY AND GUILDS
FOR EXAMINATIONS IN 1990

PART-I Measurement of Building Work
PART-II Measurement
PART-II Estimating and Analysis of Prices

CLASSES COMMENCE ON JULY 3rd

**ATLAS GROUP**
Adiyapatham Road, Tirunelvely.
(966)

## சிவாகி- சாவகச்சேரி

91 A/L கலை, வர்த்தகம் பிரிவு II
✶ உடன் அனுமதிகளைப் பெறவும் ✶

தனித்துவமான ஆசிரியர் குழு

| | |
|---|---|
| க. கலாகரன் | இரட்ணம் |
| ஜோதீஸ்வரன் | S. K. பிரபாகரன் |
| தாஸ் | முருகையன் |
| கேசவன் | |

(சி/3002)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



அமரர்
திருமதி பொன்னம்மா சின்னத்துரை

அன்னையின் மடியில்: 11-04-1909
இறைவன் அடியில்: 01-06-1989

அணையாத ஜோதியாய் ஒளிர்கின்ற உன் இனிய உருவம் காலத்தோடு கலந்து எம்முடன் வாழும் கடந்த 1-6-1989 அன்று பகல் மரணமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் திருமதி பொன்னம்மா சின்னத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் சுக்கில வருடம் ஆடி மாதம் 2-7 1989 ஞாயிறு நண்பகல் 9 மணி அளவில் நடைபெறும். இவ் வைபவத்திற்கு குடும்ப சகிதம் வருகைதந்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி தெற்கு.
அராலி.

(11413)

உ

## தசாக அழைப்பு

சென்ற 25 – 6 – 89 ஞாயிற்றுக்கிழமை இரவு சிவபதம் அடைந்த

**சிவ ஸ்ரீ தி.ச. தியாகராஜ ஐயர்**
(இளைப்பாறிய இந்து மகா வித்தியாலய ஆசிரியர் கொழும்புத்துறை)

**அவர்களின்**

ஈமக்கிரியைகளில் பங்குபற்றி வேண்டிய உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும், மலர்வளையம் சார்த்தி அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். 4 - 7 - 89 செவ்வாய்க்கிழமை முதல் நிகழவிருக்கும் அவரது தசாகக் கிரியைகளிலும் (கல்லெடுப்பு) 7 – 7 – 89 வெள்ளிக்கிழமை பகல் 12 மணி அளவில் நிகழவிருக்கும் ஒருகயக்ஞத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
மக்கள், மருமக்கள்.

கொழும்புத்துறை,
23, விதானையார் வீதி,
யாழ்ப்பாணம்.

(1119)


## ஆண்/பெண் பரிசாரகர்கள் வெற்றிடம்
### யாழ்/அரசினர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

யாழ்/அரசினர் போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள சில ஆண்/பெண் பரிசாரகர் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்வரும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து (ஆண்/பெண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. சம்பள அளவுத் திட்டம்:
   16560 23 480 27600/-
3. வயதெல்லை: 18—40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. கல்வித்தகைமைகள்:
   (அ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி
   அல்லது
   (ஆ) கல்விப் பொதுத் தராதர (சா/த)ப் பரீட்சையில் சிங்கள / தமிழ் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம்/வர்த்தக கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் இரு அமர்வுகளில் சித்தி.
   (இ) தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளில் கணிதம், முதன் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மூன்று மாதப் பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சிக் காலத்தில் நடைபெறும் பரீட்சைகள் யாவற்றிலும் இறுதிப் பரீட்சையிலும் சித்தியடைவோரே பரிசாரகர்களாக நியமிக்கப்படுவர். பயிற்சிக் காலத்தின்போது நியமனம் வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் 15-07-1989 திகதியன்றே அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக (நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் முழுப்பெயர், விலாசம், தகைமை, தொகுதி என்பவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் அனுப்பப்படல் வேண்டும்.

**வைத்தியர் (செல்வி) பி. சண்முகம்**
பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

[சி-3008]


## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



எம்மிடம்
15 – 06 – 1954

இறைவனிடம்
02 – 07 – 1985

**திருமதி ஜோ. புனிதராணி**

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்த போதும் நாளும் பொழுதும் உம்மை நினைந்து வருந்துகின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைவதாக!

அன்புச் சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

[11416]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரிய தமிழ் நூல்கள் பல நிறைந்த உப்சலாப் பல்கலைக்கழக நூல் நிலையம்

## பேராசிரியர் சிவத்தம்பியை பெரிதும் கவர்ந்தது

**யாழ்** பல்கலைக் கழகத்தின் நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 1988 செப்டெம்பர் ஒக்டோபர் மாதங்களிலும், பின்னர் 1989 மார்ச்-ஏப்ரல் மாதங்களிலும் டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய வட ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

இந்த நாடுகளின் ஆசிய கல்விக் கழகத்தின் அழைப்பின் பேரில் விருந்தாளிப் பேராசிரியராகச் சென்ற பேராசிரியர் சிவத்தம்பியை அண்மையில் சந்தித்து உரையாடினோம். அவர் இந்த நாடுகளில் உள்ள தமிழ் மொழி ஆர்வம் பற்றி எடுத்துக் கூறியதுடன் தாம் அங்கு நிகழ்த்திய விரிவுரைகள் பற்றியும் சுருக்கமாக விளக்கிக் கூறினார். அத்துடன் டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் அகதிகளாகச் சென்ற தமிழர்களின் நிலைமைபற்றியும் எடுத்துரைத்தார்.

பேராசிரியர் இந்த 3 நாடுகளிலுள்ள 9 பல்கலைக்கழகங்களுக்குச் சென்று தமிழ், தென் இந்திய பண்பாடு, தென் இந்திய வரலாறு, தமிழர் பண்பாட்டு, சமூக வரலாறு ஆகியன பற்றி விரிவுரைகள் நிகழ்த்தியதுடன் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டார்.

பேராசிரியர் சிவத்தம்பி பற்றி ஒஸ்லோவில் நடைபெற்ற பிரியாவிடைக் கூட்டம் ஒன்றில் பேராசிரியர் பீற்றர் ஷல்க் பின்வருமாறு கூறினார்.

''தமிழ்ப் பண்பாடு பற்றி வரலாற்று ரீதியான ஆழ்ந்த அறிவும், சங்க காலம் முதல் தற்காலம் வரை தொன்மை வாய்ந்த தமிழ் நூல்களுடன் தற்கால இலக்கியங்களிலும் நிலவும் சமயங்களையும்இலட்சியங்களையும் விமர்சன நோக்குடன் விளக்கும் பாங்கும் ஒன்றிணைந்த ஓர் அறிஞர் சிவத்தம்பி.''

இவ்வாறு பாராட்டுப் பெற்ற பேராசிரியர் சிவத்தம்பியிடம் உதயன் வாசகர்களுக்காகச் சில கேள்விகளைக் கேட்டோம். அவர் ஆர்வத்துடன் பதிலளித்தார்.

கேள்வி:- தங்கள் ஸ்கன்டிநேவியப் பயணம் பற்றி 'உதயன்' வாசகர்களுக்குக் கூற முடியுமா?

பதில்:- 1988 செப்டெம்பர் - ஒக்டோபரில் நோர்டிக் நாடுகளின் ஆசிய கல்விக் கழகத்தின் அழைப்பின் பேரில் டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு நான் பயணம் மேற்கொண்டேன். இந்த நாடுகளிலுள்ள 9 பல்கலைக் கழகங்களுக்கு வருடாந்த விருந்தினராக நான் சென்று விரிவுரைகள் நிகழ்த்தினேன்; கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து 1989 மார்ச் - ஏப்ரலில் உப்சலாப் பல்கலைக்கழகத்தில் ஒரு முக்கியமான விடயத்தை பற்றி ஆராய அழைக்கப்பட்டேன். பெளத்த மத வரலாற்றிலும் இந்திய தத்துவ வரலாற்றிலும் ஈடுபாடு கொண்டவர்கள் சிலர் மணிமேகலையில் உள்ள பௌத்தம் பற்றிய குறிப்புகளை தங்களுக்கு விளக்கும்படி என்னிடம் கேட்டார்கள். அந்த வேண்டுகோளுக்கு இசையவே மணிமேகலையின் 27ஆம் காதை முதல் 30ஆம் காதை வரை மூலத்தின் கருத்துகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தது.

கேள்வி:- தாங்கள் பயணம் மேற்கொண்ட நாடுகளில் ஈழத் தமிழர் பற்றி கல்விமான்களும் மக்களும் எத்தகைய அக்கறை காட்டினார்கள்?

பதில்;- எமது நாட்டில் அண்மை வரலாற்றில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் வட ஐரோப்பிய மக்களும் தமிழர் பற்றியும், தமிழ்மொழி பற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் பெரும் அக்கறை காட்டி வருகிறார்கள். குறிப்பாக இந்த நாடுகளின் மனித உரிமை இயக்கங்கள் இதில் முன் நிற்கின்றன.

நான் நடத்திய விரிவுரைகளில் ஐந்து முது ஆய்வு மாணவர்கள் பங்குபற்றினார்கள். அவர்கள் அனைவரும் உப்சலாப் பல்கலைக்கழக கலாநிதி றுத் வால்டென் அம்மையாரிடம் தமிழ் பயின்றவர்கள்.

நான் தமிழ் இலக்கியம் பற்றி விரிவுரைகள் நடத்தியதுடன் இலங்கை இனப் பிரச்சினை பற்றியும் பேச்சுக்கள் நிகழ்த்தினேன்.

கேள்வி:- இந்த நாடுகளில் தங்களை மிகுதியும் கவர்ந்த விஷயம் ஏதேனும் உண்டா?

பதில்:- உப்சலாப் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையம் என்னை மிகவும் கவர்ந்தது. அது ஓர் அற்புதமான நூல் நிலையம். வேறு இடங்களில் இல்லாத தமிழ் நூல்கள் பலவற்றை நான் அங்கு கண்டேன். ஆரம்பகாலத் தமிழ் நூல்கள் சிலவற்றின் முதற் பதிப்புகளையும் நான் இந்த நூல் நிலையத்தில் பார்க்க முடிந்தது. உதாரணத்துக்கு ''டம்பாச்சாரி விலாசம்'' என்ற நூலின் முதற் பதிப்புப் பிரதி ஒன்று அங்கிருந்தது.

கேள்வி:- டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளுக்கு அகதிகளாகச் சென்ற எம் நாட்டவர்களின் நிலைமை யாது?

பதில்:- இது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. டென்மார்க்கில் அகதிகளின் குடும்பங்கள் குடியேற வசதி அளிக்கப்படுகின்றது. நோர்வேயில் கட்டுப்பாடுகள் உண்டு. சுவீடனில் இலங்கையர் மிகக் குறைவு. இந்த நாடுகளில் இருந்து இலங்கையர்களைத் திருப்பியனுப்பும் சாத்தியம் உடனடியாக இல்லை.

ஆனால் ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். இந்த நாடுகளில் எமது இளைஞர்கள் படிப்பதற்கான வசதிகள் நிறையச் செய்து கொடுக்கப் படுகின்றன. ஆனால் அந்த வசதிகள் பூரணமாகப் பயன் படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. அவற்றை எம்மவர்கள் நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதே எனது பெரு விருப்பம். ★

செவ்வி
வீ. சின்னத்தம்பி
ஞா. குகநாதன்

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# முருகனும் அறிவுக் கோட்பாடும்

**மு**ருக வழிபாடு பழைமையானதும் புதுமையானதும் என்றவாறு ஒரு நெடிய தொடர்ச்சியைச் சுட்டிக்காட்டும்பொழுது, அதனோடு இணைந்து நிற்கும் அறிவுக் கோட்பாட்டினை அணுகுவதும் மிக்க பயனுடையது,

முருகன் என்பதைப் பண்பு விளக்கச் சொல்லாகச் சான்றோர் கருதுவர். அழகும் அழகோடிணைந்த அறிவும் முருகன் என்ற பெயரால் வெளிப்படும். செந்தமிழ்க் கல்வி முருகனின் அருள்வழி வந்தது என்ற நம்பிக்கையும் தமிழ்மக்களுக்குஇருக்கின்றது. அகத்திய முனிவருக்குக் குருவாய் இருந்த திருக்குமரன், தமிழ்ச் சங்கதின் தலைவனாக இருந்த தமிழை வளர்த்த செவ்வேள் எனவும் தமிழ்மக்கள் பெருமையும் பூரிப்பும் கொள்வர்.

வீரத்தின் திருவுருவமாகக் கருதப்பெறும் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்களைப் 'படை வீடு' எனப் பெருமையுடன் போற்றும் வழக்கம் தமிழ்மக்களிடையே உண்டு

ஆறுபடை வீடுகளுள் குன்றுதோறாடல் தவிர்ந்த மற்றவை அனைத்தும் தனித் தனிப் பெயர்தாங்கிய குன்றுகளாகும். குன்றுதோறாடல் என்பது தனியொரு குன்றினைக் குறிப்பதன்று. அதாவது அறிவு எங்கெங்கெல்லாம் நிறுவனப்பட்டு நிற்கின்றதோ அவ்வாறும் அறிவுக் குன்றுகள் மீது முருகன் நடனம் புரிவான் என்ற குறியீட்டுப் பொருளை உணர்த்துவதற்கு 'குன்றுதோறாடல்' என்ற தொடர் பயன்பட்டது.

சிதம்பரசுவாமிகள் முருகனைப் பாடும்பொழுது, அறிவை அடைவோர் 'அருகாத செல்வம் அடைவார்' என்று குறிப்பிட்டார்: அறிவு என்பது இடுக்கண் களைவதாய் உள்ளத்தால் எஞ்ஞான்றும் நுகரப்படுவதாய் அமையும் என்பது முருக பக்தர்களின் கருத்து.

அறிவால் அறியாமையைப் பிளந்தெடுக்க வேண்டும் என்பதும் முருக வழிபாட்டோடிணைந்த அறிவுக்கோட்பாடாகும். நக்கீரரின் திருமுருகாற்றுப்படையைச் செவிமடுத்து மகிழ்ந்த முருகப்பெருமான் தனது கையிலிருந்த வேலினை ஏவிக் குகையைப் பிளந்து நக்கீரனை விடுதலை செய்தார் என்ற நிகழ்ச்சி திருமுருகாற்றுப்படை வெண்பாவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தநிகழ்ச்சியை 'வேல்விழா' என்ற விழாவின் வாயிலாக இன்றும் திருப்பரங்குன்றத்திலே கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

முருக வழிபாட்டை மானுடவியல் ஆய்வின் வழியாக நோக்கும் பொழுது, உலகின் பல்வேறு பண்பாடுகளுடன் ஒப்புமை காணக்கூடிய கருத்துக்களை வெளிக்கொண்டுவர முடியும்.

அசுரர்களை அழித்தல் என்பது அறியாமையை அழித்தலின் குறியீடாகக் கொள்ளப்படும்'சூரசங்கார மூர்த்தி' என்ற சிறப்புப் பெயரும் முருகக் கடவுளுக்கு வழங்கப் பட்டுள்ளது. அறிவு என்பது வயது வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் என்பது 'தந்தைக்கு உபதேசம் செய்த மைந்தன்' என்ற நிகழ்ச்சிக் குறியீட்டால் உணர்த்தப்படுகின்றது.

சமூகத்தின் எந்தத்தரத்து மக்களையும் அறிவு சென்றடைய வேண்டும் என்ற கருத்து 'வள்ளிமணாளன்' என்ற தொடரால் உணர்த்தப் பெறுகின்றது. இவ்வாறாக முருகனும் அறிவுக் கோட்பாடும் மேலும் விரிவாக ஆராயப்படவேண்டிய பொருளாகவுள்ளது.

கலாநிதி சபா. ஜெயராசா
(யாழ் பல்கலைக்கழகம்)

# கால் புண்களின் சிகிச்சையில் கவனிக்க வேண்டிய விஷயங்கள்

மேற்றோல், உள் அணி Mucous Membrane— இவற்றின் தொடர்பின்மையால் உருவாகுவதை புண் என்று கூறுவோம். எனவே புண் தோலில் மாத்திரமல்லாமல், வாய்க்குழி, நாக்கு, தொண்டை, சுவாசவழி, குடல் முதலிய பல பாகங்களிலும் ஏற்படலாம்.

இக்கட்டுரையில் தோலில் ஏற்படும் முக்கியமாக காலில் ஏற்படும் புண்களுக்கான சிகிச்சையைப்பற்றி மாத்திரம் எழுதப்படுகின்றது. ஒரு சத்திர சிகிச்சை வாட்டில ஏறக்குறைய முப்பது சதவீதம் புண் உள்ளவர்களே. நீரிழிவு நோயாளிகளைத்தவிர, சிலனுக்கு உடன் ஆபத்து அதிகமாக ஏற்படாமையாலும், பலர் சிகிச்சை பெறுவதாலும், பல சுகாதார ஊழியர்கள் போதியளவு கவனம் செலுத்தாமைகவலைக்குரியது. பலரில் புண் குணமடையக் கிழமைகள், மாதங்கள் செல்லலாம். இக்காலத்தில் வாட்டில் தங்கியிருப்பதால் அல்லது ஒன்றைவிட்ட ஒருநாள் வைத்தியசாலை செல்லவிருப்பதால், குறிப்பாக நாள்சம்பளம் பெறுபவர்கள், செலவுகள் மாத்திரமல்லாமல், வருமானமும் அற்று பலகஷ்டங்கள், மனக்கவலை அனுபவிக்கிறார்கள். எனவே கூடிய சீக்கிரம் புண்ணைத் குணப்படுத்துவது முக்கியம்,

**காரணங்கள்**

ஒரு புண் குறைந்தது மூன்று கிழமைகளில் குணமடையாவிடின், குணமடையும் அறிகுறிகள் (விட்டம், ஆழம், சீழ், திரவம் வடிதல் முதலியன குறைதல், நோ குறைதல், சுற்றத்தில் வீக்கம், சிவந்தல் இல்லாமை) தென்படாவிடின. இதற்குக் காரணங்கள் என்ன என ஊகித்து, அக்காரணம், காரணங்களை அகற்றினால்தான் புண் சீக்கிரம் குணமடையும். காரணங்களைக் கண்டுபிடியாமல், ஒன்றைவிட்ட ஒருநாள் மருந்து கட்டுவதும், நுண்ணுயிர் அகற்றிகள் கொடுப்பதும் பயனற்றது.

முக்கிய காரணங்களில் பொதுக்காரணங்களாவன—

(i) நீரிழிவு (Diabetes Mellitus)

(ii) இரத்தச் சோகை (Anaemia)

(iii) இருதய தளர்ச்சி (Cardiac failure)

(iv) கேடய சுரப்பியின் செயற்பாட்டுக் குறைவு (Hypothyroidism)

(v) எக்காரணத்தாலும் ஏற்படும் வீக்கம் (Oedema)

குறிப்பான காரணங்களாவன:

(i) மருந்து கட்டும் முறை பிழையானது.

(ii) சீழ், திரவம் வெளியேற்றம் போதாது.

(iii) குருதிஓட்டக்குறைவு (Arterial Insufficiency)

(iv) நாளப்புடைப்பு (Varicose Veins)

(v) புண் அடியில் எலும்பு அழற்சி (Osteouuyelitis)

(vi) புண் அடியில் நார்வ்ஸைத வளர்தல் (சவ்வு) (Fibrosis)

(vii) புண்ணில் பிற பொருள் (Foreign Body)

(viii) குடா (Sinus) புண்ணிலிருந்து உள்செல்லல்.

(ix) குறிப்பிட்ட நுண்ணுயிர் தாக்கங்கள் உதாரணமாக: தொழுநோய், கசநோய், மேகநோய், பூஞ்சண தாக்கம்.

(x) புற்றுநோய்:

(xj) தொடர்ந்த அமுக்கம் (Continued Pressure)—படுக்கைப்புண்.

(xli) முண்ணாண் (Spinal Codr), நரம்பு வியாதிகள்.

(xiii) றூமரோய்ட் மூட்டு அழற்சி (Rheumatoid Arthritis)

இவற்றில் சில ஒன்று சேர்ந்தவை. உதாரணமாகத் தொழுநோய் கிருமி நரம்புகளைத் நாக்குவது,

மேலும்,வேறு நோய்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை. புண் குணமடைவதை தாமதப் படுத்தலாம். உதாரணமாக: கதிர்வீச்சு புற்றுநோய் புண்ணைமாற்றும்— ஆனால் ஏனைய புண்களைப் பாதிக்கலாம்; கோர்டிசோன் போன்ற மருந்துகள் (Cortlcosteroids). கல அழிப்பு மருந்துகள் (Cytotoxie drugs).

எனவே புண் விரைவில் குணமடையும் அறிகுறிகள் தென்படாவிடின், நோயாளி வைத்தியசாலை சென்று, காரணம் கண்டுபிடிக்க, சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். சிறுபுண், காரணம் அகற்ற விரைவில், குணமடையும். ஆனால்பெரும் (விட்டம் கூடிய) புண் குணமடைய பல கிழமைகள் செல்லக்கூடும். ஆகையால், தோல் ஒட்டு (Skin grafting), தோல் சுழற்றி தைத்தல் Rotation Flap) போன்ற முறைகள் கைப்பற்றப்பட்டு பத்துநாட்கள் வரையில் வீடு திரும்பலாம்.

**பிழையான மருந்துக் கட்டுகள்**

காரணங்களில் பிழையான முறையில் மருந்து கட்டுவது ஒன்று எனக்குறிப்பிடப்பட்டது. தகுதியற்ற பலர் (Quacks) மருந்து கட்டுவதில் ஈடுபடுவதால் இம்முறையைப் பற்றி சில குறிப்புகள் அவசியமானது. அவித்த அல்லது ஒற்றேக்கிளேவில் (Autoclave) கிருமி அகற்றப்பட்ட இரண வைத்தியக் கருவிகள் (Forceps)), துணிகள், பஞ்சு, பாத்திரங்கள் பாவிக்க வேண்டும். கிருமி அகற்றி (artisptie) உதாரணமாக ஸவ்லோன், புதிதாக ஒவ்வொரு நாளும் கலக்கப்பட வேண்டும்.(காலம் சென்ற கிருமி அகற்றிகளில் கிருமி வளர்ச்சி கண்டு பிடிக்கப்பட்டது) எனவே ஒவ்வொரு நாளும் தேவையான அளவே கலக்கப்பட வேண்டும். கலவையின் விகிதம் குறிக்கப்பட்ட அளவில் இருக்க வேண்டும். மருந்து கட்டுபவர், மூக்கு மூடி கட்டி, கைகளை நன்றாக சவர்க்காரத்தால் கழுவி, கைகளால் ஒன்றும் தொடாமல், கருவிகள் மூலமே செயற்படவேண்டும்.

புண்ணின் அண்மையில் உள்ள தோலுக்கும், புண்ணுக்கும் வெவ்வேறு பஞ்சு துணிகள் பாவிக்க வேண்டும். தோலுக்குப் பாவிக்கும் துணி பஞ்சால் புண் துடைத்தால், தோலில் உள்ள கிருமிகளை புண்ணுள் செலுத்துவதாக முடியும். தோல் துடைக்கும் பொழுது, புண் மூடப்பட வேண்டும். இல்லையேல் தோலிலிருந்து கிருமி தங்கிய கிருமி அகற்றி புண்ணுள் கசியும் ஸ்பிறிற் (Spirit) தோலுக்கு மாத்திரம் பாவித்தால் போதும். ஸ்பிரிற் புண்ணை குணப்படுத்தும் கலங்களை அழிக்கக்கூடும். புண்ணை மெதுவாகத் துடைப்பது நன்று. உரைத்து துடைப்பதால் புண்ணிலுள்ள கிருமிகளை, இளையங்களுக்குள் செலுத்தி, பரவலாக்குதலாகலாம்.

புண் அண்மையில், சிவந்து, வீங்கி, நொந்து, காய்ச்சலும் ஏற்பட்டால், கிருமி பரவலுக்கு அறிகுறிகளாகும், நிணநீர் கணுக்களும் வீங்கக்கூடும். விரைவில் வைத்தியரை நாட வேண்டும்.

நீரிழிவு உள்ளவர்கள் கட்டாயமாக தகுந்த வசதிகள் உள்ள சிகிச்சை நிலையத்தில், தகுந்த வைத்தியரிடம், சிகிச்சை பெறவேண்டும். இல்லையேல் கிருமி பரவி, கால் அகற்றும் சந்தர்ப்பம் ஏற்படலாம், மரணமும் ஏற்படலாம்.

வைத்திய கலாநிதி ''வேகி''

# வாசகர் திருமுகம்

## பஸ் ஊழியர்கள் கவனிப்பார்களா?

சமீபத்தில் கொடிகாமம் பஸ் நிலையத்தில் இ. போ. ச. பஸ் ஒன்று ஸ்தானத்தில் தரித்ததும் அதிலிருந்து இறங்கிய வயோதிபப் பெண் ஒருவர் முற்றாகத் தன் பாதத்தை நிலத்தில் வைப்பதற்கு முன் வாகனம் இயங்கியது. அப்பெண் நிலத்தில் விழுந்து காயப்பட்டார். பஸ் ஓடிச் சென்றுவிட்டது. அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்ய நேரிட்டது.

பயணிகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பஸ் சாரதிகளும் நடத்துநரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

கொடிகாமம். — உதயன் நிருபர்

## ஜனாதிபதி வழங்குவாரா?

இன்று வரை ஓய்வூதியக்காரர்களுக்கு மீத ரூபா 26C/- வாழ்க்கைப்படி வழங்கப்படவில்லை. ஓய்வூதியங்களிலான 3சதவீத வெட்டை 6 சதவீதமாக்க வேண்டும என்றும் அண்மையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவை நியாயமற்ற நடவடிக்கைகள்.

ஓய்வூதியக்காரர் என்போர் எமது நாட்டில் உள்ள அரசுகள் அறிந்த பிச்சைக்காரர்கள் ஆவர். இவர்கள் இப்பொழுது தொகுக்கப்படும் 'வறுமைப் பட்டியலில்' சேர்க்கப்பட வேண்டியவர்கள்!

தமது வாழ்வின் முக்கிய காலத்தை அரசாங்க சேவையில் செலவிட்டவர்கள் இவர்கள் அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியம் என்பது இலவச சலுகை அல்ல. அவர்கள் அதற்காக உழைத்திருக்கின்றார்கள். அரசு அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்.

எமது ஜனாதிபதி மீத ரூபா 260/-ஐ 1987 நவம்பரிலிருந்து அவர்களுக்கு வழங்குவாரா?

யாழ்ப்பாணம். — ஓர் ஓய்வூதியக்காரர்

# அடி தொழுவார்க்கு அருளும் ஆனைக்கோட்டை முத்த நயினார்

**த**மிழ் வளர்த்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் ஆனைக்கோட்டை எனும் அருள்மிகு வளம்பதிக் கிராமம்இருப்பதுதெரிந்ததே!

ஆனைக்கோட்டைச் சந்திக்குச் சமீபமாக நவாலி வீதியில் அமைந்துள்ளது ஸ்ரீமூத்த நயினார் கோயில். இந்த ஆலயம் தற்போதைய அமைப்பில் சோமாஸ்கந்த மூர்த்தமான திருக்கோயிலாகக் கட்டி முடிக்கப்பட்டு மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற தினம் கலியப்தம் 4990 - சர்வதாள வருஷம் ஆவணி மாதம் மிருகசீர்ஷ நக்ஷத்திரம் கூடிய 12. 9-1888 அன்றாகும்.

அதற்குமுன் ஆதியில் இவ்வாலயம் கிடுகால் வேய்ந்த முருகன் ஆலயமாக இருந்தது என்றும் அல்லாமலும் ஊர் மக்கள் எண்ணெய் வியாபாரம் செய்து வீடு திரும்பும்வழியில் அயற் கிராமம் ஒன்றில் ''என்னையும் கொண்டுபோ'' என்ற அசரீரி வாக்கியங்கள் பலமுறை ஒலிக்க - ஒருவரையும் காணமல் பிள்ளையார் உருவில் ஒரு கற்சிலை தென்பட அந்தச் சிலையைக் கொண்டு வந்து ஆலய தெற்குப்பக்கம் உள்ள தாமரைக்குளக் கரையில் வைத்து வழிபட்டனர் என்றும் கர்ண பரம்பரையாக மக்கள் பேசிக் கொள்வர்.

அமரர் சிவகுருநாத முதலியார்- நமசிவாய முதலியார் அவர்கள்தற்போதைய அமைப்பில் ஆலயத்தைக் கட்டி உரிய இடங்களில் தாமரைக் குளக்கரையில் இருந்த பிள்ளையாரையும் பார்த்தசாரதி சொரூபமாக மகாவிஷ்ணுவையும் விநாயகர், முருகன், அம்மன் முதலிய திருவுருவச்சிலைகளையும் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் செய்வித்து சோமஸ்கந்த மூர்த்தமான ஆலயமாக வழிபட ஒழுங்கு செய்தார்.

அதற்கு முன்பே கோவில் தென்புர வீதி கிழக்குமூலையில் கலியப்தம் 4970 சுக்கில வருஷம் சித்திரை மாதம் (1869) ஒரு தருமசத்திர மடம் கட்டி அதற்கு வேண்டிய காணிபூமிகளையும் தருமசாதனம் செய்து வைத்தார்.

அடி தொழுவார்க்கு அருளும் ஆறுமுகன் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தமாக ஆனைக் கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் எழுந்தருளி வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்றார்.

இவ்வாலய மகோற்சவம் ஆனி மாதம் அமாவாசை தினத்தைத் தீர்த்தமாகக் கொண்டு கொடியேறி பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெற்று 16 ஆம் நாள் திருக்கல்யாண விழாவும் அடுத்து வருகிற செவ்வாய் அல்லது வெள்ளியில் மாரியம்மன் வைரவர் பொங்கலுடன் பூர்த்தியுறும். விழா நாட்களில் ஒவ்வொருநாளும் ஒரே மாதிரியான மூன்று வாகனங்களில் திருவுலா வருவதும் மூன்று வாசல் பெரிய சப்பரமும் தேரன்று மூன்று தேர்களும் வலம்வருவதும் மடத்தில் தேர்த்திருவிழா அன்று அன்னதானமும் நடைபெறுவதும் சிறப்பான அம்சங்கள். இன்று நிகழும் தேர்த்திருவிழா ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்கள் புடைசூழ ஆடி அசைந்து வரும் ரதத்தின் அழகுக் காட்சி காண விரைந்தோடி வருக! அவனருள் பெறுக! ★

சிவஸ்ரீ. சு. கைலாசநாதக் குருக்கள்
(ஸ்ரீ மூத்தநயினார் தேவஸ்தானம் ஆனைக்கோட்டை)

நாட்டில் சமாதானம், சுபீட்சம் நீதி நிலைக்க ஆனைக்கோட்டை மூத்தநயினார் ரதத்தில ஆரோகணித்து வீதியுலா வர யாசிக்கின்றோம்.
தரம்மிக்க வி. எஸ். பி ஸ்பெஷல் லஞ்ஒயில் வியாபாரிகள்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-2736]

நிரு ரியூசன் சென்ரர்
புகையிரத வீதி, கோண்டாவில்,
கடந்த பரீட்சையில் எமது நிறுவனத்திற்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த மாணவ மணிகளுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.
(சி3009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச. கணக்காளர் தங்காலையில் சுட்டுக்கொலை

தங்காலையில் இ. போ. ச. டிப்போவின் கணக்காளர் கீர்த்திசிறி ஜெயவர்ண என்பவரை இனந்தெரியாதவர்கள் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொன்றனர்.

மாலபே என்னும் இடத்தில் புதன்காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட ஐந்து சடலங்களைப் பொலீஸார்கண்டெடுத்தனர் ஐவரும் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் என்று சொல்லப் பட்டது.

தலஹென என்னும் இடத்தில் மேலும் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

களுத்துறை, துடாகெல்லை என்னும் இடத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் எஸ். வன்னியாராய்ச்சி சுட்டுக் கொல்லப் பட்டார். (ல ஓ)


# விக்ஞ டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட். யாழ்ப்பாணம்.

[Red. No-12414]

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 5

O/L DAY CLASSES (8.30 — 1.30)

EVENING CLASSES (3.00 - 5.00)

★ புதிய பழைய பாடத்திட்டம் ★

புதிய பிரிவு ஆரம்பம்: 5-7-89

முக்கிய குறிப்பு:-

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினுல் போதிக்கப்படுகின்றது.

- கடமை கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
- மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்யப் படல் வேண்டும்.

[சி-2975]



# நாஷனல் சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி

★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING AND TRAVEL**

New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
JAFFNA.

(C/2958)



உ

# திருமண விஞ்ஞாபனம்

நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 25 ஆம் நாள் (9-7-89) ஞாயிற்றுக்கிழமை சஷ்டி திதியும், உத்தர நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடி பகல் 11 மணி முதல் 12 மணி வரை வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது மகன்:

★ திருவளர் செல்வன் சிவ. அசோகன்

அவர்களுக்கும்

உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும், கிளிநொச்சியில் வசித்தவருமான திரு. மு. யோகலிங்கம் J.P. திருமதி புவனநாயகி யோகலிங்கம் ஆகியோரின் மகள்

★ திருவளர் செல்வி யோகராணி

அவர்களுக்கும்

லண்டன் ஈஸ்ற்ஹாம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் திருமணம் நிகழ்த்த திருவருள் பாலித்துள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருடைய ஆசிகளையும் வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்
மு. சிவராசா.
(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)
திருமதி பூமகள் சிவராசா.

122B, St. Awdrys Road,
Barking, Essex,
IG 11 7Q: London.

(998)


யாழ் பல்கலைக்கழகத்துக்கான

# ஜப்பானிய உதவி தடைப்பட்டதால் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்பு

## அதனைப்பெற நிர்வாகம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் - பல்கலைக்கழகத்துக்கு ஜப்பானிய அரசு வழங்க விருந்தஉதவி தடைப்பட்டதால் பல அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஜப்பானிய அரசு உதவி செய்ய முன் வந்து அபிவிருத்தித் திட்டங்களின் விவரங்களை சகல பல்கலைக்கழகங்களிடமும் இருந்து கோரி இருந்தது.

இதற்கமைய யாழ்-பல்கலைக்கழகமும் தான் மேற் கொள்ள உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விவரங்களை கடந்த 86 ஆம் ஆண்டு சமர்ப்பித்திருந்தது.

ஆனால் கடந்த காலங்களில் ஜப்பானிய அரசின் உதவிகளை யாழ் - பல்கலைக்கழகம் தவிர்ந்த மற்றைய பல்கலைக் கழகங்களுக்கு இலங்கை அரசு சிபார்சு செய்து பெற்றுக் கொடுத்துள்ளது.

யாழ் - பல்கலைக்கழகத்துக்கு இதுவரை இவ்வுதவி கிடைக்கவில்லை.

இதனால் பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்த முடியாத நிலை இருந்து வருவதாகக் கவலை தெரிவிக்கப் படுகிறது.

யாழ்-பல்கலைக்கழக நிர்வாக மேற்படி நிதியை பெற முயற்சிகள் மேற் கொண்டு வருகிறது. (இ-3)

## மாற்றுப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபடவேண்டும்

### விவசாயப் பயிற்சி வகுப்பில் உரை

விவசாயிகளின் உற்பத்திகளுக்கு, உத்தரவாத விலை இல்லை; ஸ்திரமான சந்தை இல்லை இந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு விவேகமான முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளாவிட்டால், விவசாயிகள் மீளமுடியாத கடனாளியாகி விடுவார்கள். திருந்திய பயிர்ச்செய்கை முறைகளிலும் மற்றபயிர்ச் செய்கைகளிலும், நோய் பீடைகளை கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டு விவாசாயச் செய்கையை லாபகரமுடையதாக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மேற்குப் பகுதிக்குப் பொறுப்பான காரியலயப் போதனாசிரியர் திரு. சி. ரி. தம்பியப்பா வடலியடைப்பு விவசாயிகள் கழக உறுப்பினர் மத்தியில் 'விவசாயச் செய்கை அதிக ஆதாயம் பெற நாம் என்ன செய்ய வேண்டும்'' என்னும் தலைப்பில் நடைபெற்ற விவசாயப் பயிற்சி வகுப்பில் கலந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தொல்புரம் சமநலசேவை நிலைய பண்டத்தரிப்பு பகுதி விவசாய விரிவாக்க அலுவலர் திரு. அழகரத்தினம் ஏற்பாடு செய்த இக்கருத்தரங்கு அரசடி சன சமூக நிலையத்தில் நடைபெற்றது.

தொல்புரம் போதனாசிரியர் திரு. எஸ். சண்முகசுந்தரம் உரையாற்றுகையில பயிர்களுக்கு இடையில் சணல் விதைப்பதும், தாழ்ப்பதும் அதிகபலனைதரும். இயற்கை பசளைகளும் இடப்படவேண்டும். எனக் கூறினார். (ச-120)

### ஆலோசனைக் கூட்டம்

காங்கேசன்துறை, ஜூலை 2

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம்கந்தசாமி ஆலய உற்சவம் தொடர்பாக மேற் கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் பற்றி ஆராய இன்று வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது-

இக்கூட்டத்தில் பல திணைக்கள அதிகாரிகள், பொது ஜன அமைப்புப்பிரதிநிதிகள் மாவை, கீரிமலை ஆலய ஆதீன கர்த்தாக்கள் கலந்து கொள்ள விருக்கின்றனர். (க - 68)

### ஆரம்பக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம்இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு பிறவுண்வீதி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (க-10)

### விவசாயிகளுக்கு உதவி

மன்னார், ஜூலை 2

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் கடந்த கால போகத்தில் சுமார்7000 விவசாயிகளுக்கு விதைநெல் உரம் பீமட்டு உரம் மிளகாய் உரம் விதைப் பொருள் நடுகைப் பொருள் போன்றவற்றை வழங்கியுள்ளது. (ச)

## குழந்தைகள் சுவைக்கத்தக்க கவிதைகளை படைக்கவேண்டும்

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 02

குழந்தைகள் எம்மிலும் பார்க்க குறைந்த அனுபவம் உள்ளவர்கள் என்ற நோக்கில் கவிதைகள் எழுதக் கூடாது. குழந்தைகள் சுவைக்கத்தக்க கவிதைகள் பாட்டுக்கள் படைக்கப்படவேண்டும்',

ப்படிக் கூறினார் திரு க. சொக்கலிங்கம். (சொக்கன்)

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற பரிசளிப்பு. நூல் வெளியீட்டு விழாவில் கலந்து பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலக்கிய வட்டத்தின் தலைவர் திரு: செம்பியன் செல்வன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று இங்கு வெளியாகும் குழந்தைகள் கவிதைகள் சமுதாயத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும். இதன் ஆசிரியர்கள் ஆரம்பப்பாடசாலையில் குழந்தைகளுடன் பழகிய அனுபவத்தில் சிறந்த முறையில் எழுதியுள்ளார்கள்

இன்று ஆராய்ச்சி இலக்கிய நூல்களை வி குழந்தைகள் கவிதைநூல்கள் கூடுதலாக விற்பனையாகின்றன. அதற்கு காரணம் குழந்தைகள் கவிதைகளில் கொண்டுள்ள ஆர்வம்தான்.

எம் நூல்களை வெளியீட்டு விழா மூலம்தான் பிரசாரம் செய்ய வேண்டிய நிலை இன்னும் இருந்து வருகிறது. வெளியீட்டு விழா இன்றி வாசகர்கள் நூலைத்தேடி ஆதரவு வழங்கும காலம் வர வேண்டும்.

இந்திய நூல்களுடன் போட்டி போடக்கூடிய நிலை எம் இலக்கியப் படைப்புக்களுக்கு இருந்த போதும் விளம்பரம் மூலம் தரம் குறைந்த இலக்கியங்களை மக்கள் வாங்குகிறார்கள். இந்நிலை மாறவேண்டும்.

இப்படி அவ கூறினார்.

முதல்பிரதியைதிரு.செக்கனிடம் இருந்து திரு. வரதர் பெற்றார்.

ஐயா சச்சிதானந்தனின் வரவேற்புரையும், மயிலங்கூடலூர் நடராஜன். காரை சுந்தரப்பிள்ளை ஆகியோரின் ஆய்வுரையும் இடம் பெற்றன. (இ - 3)

## ஊழியர் வேலை நீக்கம்; முடிவை ரத்துச் செய்க!

### எதிர்க் கட்சிகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 2

வேலை நிறுத்தம் செய்யும் போக்குவரத்து ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கும் முடிவை ரத்துச்செய்யும்படி எதிர்க்கட்சிகள் கூட்டாக அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

எதிர்க்கட்சிகளின் விசேஷ கூட்டம் ஒன்று செவ்வாயன்று நடைபெற்றது. அப்போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நியாயமான முறையில் வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காணும்படி அந்தத் தீர்மானத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. (ஒ - எ)

## பட்டதாரி மாணவருக்கான நிதியுதவி ரூபா 200 உயரும்

பட்டதாரி மாணவருக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் 200 ரூபாவால் அதிகரிக்கப்போவதாக உயர் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பத்துறை அமைச்சர் சாகுல் ஹமீது அறிவித்திருக்கிறார்.

மஹியங்கனையில் கம்உதாவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

அதிகரிக்கப்பட்ட நிதி உதவியுடன் கல்விக்குத் தேவையான வசதிகள் உணவுப்பொருள்கள் ஆகியனவும் சலுகை விலையில் வழங்கப் படும்.

பிரவேசத் தகுதிபெற்ற 12 ஆயிரம் பேரில் 90 சதவீதமானோருக்கு பல்கலைக்கழக அனுமதிகிடைக்கும்என அமைச்சர் சாகுல் ஹமீது சொன்னார். (ஒ-எ)

### மடுமாதா திருநாள்

நவாலி புனித இராய்யப்பர் சின்னப்பர் ஆலயத்தில்இன்று ஞாயிற்றுக்கிழமை (2-9 89) மடுமாதா திருநாள் நடைபெறும்

காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மடுமாதா திருச்சுருபத்தை அலங்காரப் பேழையில் இளம் பெண்கள்வீதியுலா எடுத்துச் செல்வர்.

சுற்பிரசாத முடிவில் திருச்சுருப ஆசீர்வாதம் இடம் பெறும். (ச-51)

## நுகர்ச்சியாளர் சமாஜம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உணவுப் பொருள்களை வழங்கக் கூடியதாக நுகர்ச்சியாளர் சமாஜம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சமாசம் அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க விசேஷ கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் சமாசத்தின் ஆரம்பக்கூட்டம் நடைபெறும். (இ - 3)

### மண்எண்ணெய் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மண்எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர்.

ப. நோ. கூ. சங்கங்களில் மண்எண்ணெய் இல்லை. வெளியார் சந்தையில் ஒரு போத்தல் மண் எண்ணெய் எட்டு ரூபா முதல் ஒன்பது ரூபா வரை விற்கப்படுகிறது. (இ-3)

### புனித செபஸ்தியார் நவநாட்கள்

குருநகர், ஜூலை 2

பாழ் உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த நவநாள் உற்சவம்5 ஆம்திகதி புதன்கிழமை மாலை5 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கி நான்கு நாட்கள் நடைபெறும்

6 ஆம்திகதி மாலை 5 மணிக்கு செபமாலை திருப்பலியும் 7 ஆம் திகதி மாலை 5 மணிக்கு செபமாலை, திருப்பலி முதல் நன்மை நற்கருணை விழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் திருப்பலியும், திருச்சுருப பவனி ஆசீர்வாதமும் நடைபெறவுள்ளன. (ச-51)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27-06-1963

உதிர்வு: 02-07-1987



செல்வி மார்க் தங்கராணி

ஐந்து வருடம் காத்திருந்து உம்மை அன்புடனே பெற்றெடுத்தோம் உம் திருமணக் கோலத்தைக் காணு முன்னே எம்மைத் தீராத் துயரில் விட்டுச் சென்றனையே

உம் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, தங்கை, தம்பிமார்.

நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்

[11408]



# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20-12-1923

மறைவு: 14-07-1988

திதி: 03-07-1989

அமரர்

திருமதி கமலாம்பிகை பொன்னையா

அன்பின் திருவுருவாய், அருளின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், விளங்கி எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே, எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்று விட்டதுவ ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு நீங்கவில்லையே. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம். உங்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்.

கணவர், பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

5ஆம் வட்டாரம்,
ஐயனார் கோவிலடி,
அனலைதீவு.

(1108)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

**பொருள்:**
பெருமைப் பண்பு எக்காலத்திலும் பணிந்து நடக்கும்; ஆனால் சிறுமையோ தன்னைத்தானே வியந்து பாராட்டிக்கொள்ளும்;


உதயன்
இல: 393/3, நாவலர் வீதி, தொலைபேசி 24805 22078
யாழ்ப்பாணம்;
02 - 07 - 1989


## கப்பல் பொருளாதாரம்!

இந்த வருடத்தில் ஐந்து லட்சம் மெட்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1988 மாரிப் போகச் செய்கையில் நெல்விளைச்சல் 35 சத வீதம் குறைந்து விட்டது. இந்த வருடத்தில் சிறுபோகம் நெற்செய்கை செய்யமுடியாதபடி வரட்சி நிலவுகிறது. இந்த இரண்டு காரணங்களாலுமே பெருந்தொகையில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் விளக்கம் தந்துள்ளன!

இந்த வருடத்தில் ஐந்து லட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும் பட்சத்தில், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவே ஆகக் கூடிய அரிசி இறக்குமதியாக இருக்கும் என்று புள்ளி விவரங்கள் ஒருபுறம் கேலி செய்கின்றன!

இந்த நாட்டு மக்களின் பிரதான உணவுப் பொருள் அரிசி. மேலைநாட்டுக் கோதுமை மா இப்போது தாராள பாவனையில் இருந்தபோதிலும், அரிசியின் முதலாம் இடத்தைப் பெற முடியவில்லை. எமது நாட்டு விவசாயிகளின் வளத்துக்கு அதுவே சாதகமானது.

மிகச்சிறிய நாடாக இருந்த போதிலும்; நிலவளம் நீர்வளம், மனிதவளம் என்பன திருப்தி தரும் அளவுக்கு இருந்த போதிலும் அரிசியில் தன்னிறைவு காண முடியாத துர்ப்பாக்கியம் இங்கு உண்டு. இது கவலைக்கு உரியது.

இரண்டொரு வருடங்கள் அரிசி ஏற்றுமதி செய்வதாகப் பிரசாரப் படுத்தப்பட்டதை, பிரபல்யப் படுத்தப்பட்டதை மறந்து விட்டோம் என்பதில்லை. சுயதேவையைப் பூர்த்தி செய்த பின்னர்தான் அரிசி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பதற்குத் தக்க பதில் தெரியாது.

எப்படிப் பார்த்தாலும், இலங்கை ஒரு விவசாய நாடு. விவசாயம் தான் பெரும்பாலான மக்களுக்கு வாழ்வு தரும் தொழில். தேயிலை, றப்பர், தெங்கு என்ற பெருந்தோட்டப் பயிர்களும் அவற்றின் பயிர்ச் செய்கையும் செலாவணி தேடிகள். அவற்றைப்போல நெற்செய்கைக்கும் முக்கியத்துவம் தரப்படவேண்டும்.

இந்தக் கொள்கையையே எல்லா அரசுகளும் கடைப்பிடிப்பதாகக் கூறினாலும், நெல் உற்பத்தியில் இன்னமும் தன்னிறைவு காணப்படவில்லை. விவசாயிகளுக்கு உதவும் பொருட்டுப் பலவித மானியங்கள் வழங்கப்படுகின்றன; நவீன விஞ்ஞான முறைகள், உத்திகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. கடன் வசதிகள், உபகரண வசதிகள் என்று பல வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு அரசுகள் பிரசாரம் செய்கின்றன.

ஆனால் இன்னமும் அரிசியில் தன்னிறைவு இல்லை ஏன்? இதன் காரணம் என்ன? சரியாகக் கேட்பதானால் மர்மம் என்ன? — எவருக்குமே புரியாத புதிர் இது.

விவசாயியின் வாழ்க்கை வசதிகள் இன்னமும் சரிவரப் பேணப்படவில்லை. அவன் நஷ்டம் அடையும் போது அவனது கையைத் தூக்கிவிட்டு அவனுக்குச் சோறு போட உருப்படியாக எதுவும் நடப்பதாக இல்லை. விவசாயி பருவ காலத்துடன் போராடுபவன். இயற்கையின் தயவை வேண்டி நிற்பவன். இயற்கை கருணை காட்டாத போது மற்றவர்களும் அவனைக் கைவிட்டு விடுகிறார்கள். செயலளவில் அரசும் அப்படியே!

விவசாயி நலன் பேணுதல் உற்பத்திப் பெருக்கத்தின் உயிர்நாடி: இதனை உணர வேண்டும். இல்லையேல் அபிவிருத்தித் திட்டங்கள், சுயதேவைப் பூர்த்தி என்று வாயால் சொல்லிப் பயனில்லை.

அரிசிக்குப் பதிலான தானிய வகைகளை உற்பத்தி செய்வதற்கும் முன்னுரிமை தரப்பட வேண்டும். நெல் விளைச்சல் கண்ட காலங்களில் அவற்றை மறந்து, அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்படும்போது மட்டும் அவற்றை நினைப்பதால் பயனில்லை. அரிசி இறக்குமதியை நிறுத்தவும் அந்த நிலைப்பாடு உதவாது.

கப்பல்களையே அரிசிக்கு எதிர்பார்க்கும் காலம் எப்போது மறையும்? அரிசி விளைச்சல் குறைந்தாலும், சாப்பிட மாற்றுப் பொருள் உண்டு என்ற நிலை எப்போது வரப்போகிறது?

பொருளாதாரங்களில் பல வகை உண்டு: ஆனால் இலங்கை நீண்ட காலமாகத் தான் கண்டு வரும் கப்பல் பொருளாதாரத்தைத் தான் தொடருமா?

## சுருவில் ஐயனார் கொடியேற்றம்

ஊர்காவற்றுறை ஜூலை 2
ஊர்காவற்றுறை சுருவில் ஐயனார்கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 3ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது;

இரதோற்சவம் 11ஆம்திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாளானபுதன் கிழமை நடைபெறும்.

உற்சவம் நடைபெறும்பத்து நாட்களும் தினமும் மாலை 5 மணிதொடக்கம் 6 மணிவரை பிரம்மஸ்ரீ ம. ஜெயராமசர்மாவின்சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்; (ச–16)

## வறுத்தலை விளான் விநாயகர் இரதோற்சவம்

காங்கேசன்துறை, ஜூலை 2
வரலாற்றுப் பெருமைமிக்க வறுத்தலை விளான் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்றுஞாயிறு நடைபெறவிருக்கிறது. நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (க-68)

## வீடுகளுக்கு திரும்பினர்

கிளிநொச்சி, திருநகரில் கடந்த வாரம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து குடிபெயர்ந்த மக்கள் தற்போது தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள்.

● இந்திய பொதுத் தேர்தல்;

# தி. மு. க. -காங்கிரஸ் தேர்தல் கூட்டு முடிவு ராஜீவிடம் என்கிறார் மூப்பனார்

மதுரை, ஜூலை 01
வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் அணி சேர்வது குறித்து இந்திரா காங்கிரஸ் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று திரு. ஜி. கே. மூப்பனார் சொன்னார்.

தமிழக சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. மூப்பனார் புதுடில்லியில் பேச்சுக்களை நடத்திவிட்டு மதுரை திரும்பினார். அப்போது செய்தியாளர் மத்தியில் அவர் பேசினார்.

திரு. மூப்பனார் மேலும் சொன்னதாவது;

சில விஷயங்களில் அதிமுகவுடன் இந்திரா காங்கிரஸ் இணக்கம் கண்டுள்ளது.

அதன் அர்த்தம் தேர்தலுக்கு ஆக இரண்டு கட்சிகளும் பொது முன்னணி ஒன்றை அமைத்துள்ளது என்பது அல்ல.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தி. மு. கவுடன் இந்திரா காங்கிரஸ் கூட்டு வைக்குமா என்பது பற்றி காங்கிரஸ் தலைமைப் பீடம் தான் முடிவு செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் அதிக தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடும்.

உட்கட்சிச் சண்டை காங்கிரஸின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்காது.

நாட்டின் எதிர்காலத்தை வருகிற நாடாளுமன்றத் தேர்தல் நிர்ணயிக்கப் போகிறது.

தமிழக காங்கிரஸ் தலைவர் பதவிக்கு திரு. வாழப்பாடி ராமமூர்த்திக்குப் பதிலாக புதிய ஒருவரை நியமிப்பது கட்சித் தலைமைப் பீடத்தின் கடமையாகும்.

ராஜீவ் காந்திக்கு மாற்று ஆள் காங்கிரஸில் இல்லை. அனைவரும் அவரின் கட்டளையை ஏற்கவேண்டியவர்களே.

இப்படி கருப்பையா மூப்பனார் சொன்னார். (எ)

## சார்க் அமைச்சர் மாநாடு ஒத்திவைப்பின் பின்னணியில்...

இஸ்லாமபாத், ஜூலை 1
சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

ஒத்தி வைக்கப்படும் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் தகராறைத் தீர்க்க எடுக்கப்பட்ட பின்னணித் தகவல்கள் வருமாறு;

அமைதிப்படை வாபஸ் விவகாரம் பற்றி இலங்கையைச் சமாதானப்படுத்தி இந்தியா அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

இது பாகிஸ்தான் தெரிவித்த யோசனை.

இதை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை.

பின்னர் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்; அதுவும் பலனளிக்கவில்லை.

வேறு சில நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவுடன் தொடர்பு கொண்டனர். அதுவும் பலனளிக்கவில்லை.

இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ். கே. சிங்குடன் பாகிஸ்தான் செயலாளர் ஹியூமான் கான் 3 முறை தொலைபேசியில் பேசினார். அதுவும் சரிவரவில்லை. (எ)

## நிக்கரகுவா தேர்தலில் எதிர்க்கட்சிகள் கூட்டணி

மனகுவா, ஜூலை 1
அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நிக்கரகுவாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது ஆளும் சன்டினிஸ்டா கட்சியை எதிர்த்துப் போட்டியிட 14 எதிர்க்கட்சிகளும் கூட்டணி ஒன்றை அமைத்துள்ளன.

எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிடாவிட்டால் ஆளும் கட்சியைத் தோற்கடிக்க முடியாத நிலை இருப்பதாக அபிப்பிராய வாக்கெடுப்பில் தெரியவந்தது.

அதைத் தொடர்ந்தே கூட்டணி அமைக்கப்பட்டு உள்ளது.

பொதுக் கொள்கைத் திட்டம் ஒன்றின் கீழ் எதிர்க்கட்சிகள் போட்டியிடும் என்று தெரிவிக்கப்பட்டது. [எ]

## மன்னிப்புச்சபை கண்டனம்

பீகிங், ஜூலை 1
சீனவில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் செய்திருக்கிது.

இதுவரை 33 பேர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டன என்று சபை தெரிவித்தது.

சிறையில் அடைக்கப்பட்டவர்கள் பலருக்கு இந்த ஆபத்து இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (எ)

இந்தியப் பொதுத் தேர்தல்

## உதயசூரியன்சின்னத்தில் தி.மு.க. போட்டியிடும் என அறிவிப்பு!

திருச்சி. ஜூலை 1
வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் தான் தி. மு. க. போட்டியிடும்.

திருச்சியில் வைத்து முதலமைச்சர் கருணாநிதி இத்தகவலை வெளியிட்டார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முதலமைச்சர் மேலும் சொன்னதாவது;

தேசிய முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகளும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுமா என்பதை என்னால் சொல்லமுடியாது.

இது பற்றி முன்னணி இன்னமும் முடிவு எடுக்கவில்லை.

தேசிய முன்னணியில் செல்வி ஜெயலலிதாவைச் சேர்ப்பதற்கு முன்னாள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே முயற்சி எடுத்து வருவது பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

17 உறுப்பினர் அமைச்சரவையை விஸ்தரிக்கும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை.

தமிழ்நாடு பேரவையை திருப்பி அமைக்கும் யோசனையை நாடாளுமன்றத்தின் எதிர்வரும் கூட்டத்தொடர் அங்கீகரிக்கும்' என்று சொன்னார். (எ)

## அரசியல் ஸ்திரமற்ற நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு

ஸ்திரமற்ற நாடுகளில் தான் சனத்தொகை அதிகரித்து வருகின்றன.

இந்த அதிகரிப்பிற்கு காரணம் சமூகங்களிடையே அமைதியின்மை நிலவுவதும் அரசியல் குழப்பங்களுமே என்று சர்வதேச குடும்பத்திட்ட ஆய்வு ஒன்றில் வெளியாகியுள்ளது.

இந்த ஆய்வை நடத்திய சனத்தொகை கமிட்டியில்101 நாடுகளின் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர்.

இந்த ஆய்வின்படி, ஸ்திரமற்ற ஆட்சிஇருக்கும் மொரிட்டானியா, எதியோப்பியா, ஸயாரோ, புருண்டி, சூடான், மியான்மார் (பர்மா), சாட் மற்றும் உகண்டா ஆகிய நாடுகளில சனத்தொகைவேகமாக அதிகரித்து வருகிறது.

ஸ்திரமான ஆட்சியுடைய ஜப்பான், நோர்வே, சுவிட்சர்லாந்து, இத்தாலி, டென்மார்க், அவுஸ்திரேலியா சுவிடன் ஆகிய நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு மிகவும் குறைவாகவுள்ளது.

அமெரிக்கா. பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளின் அரசியல் ஸ்திரம் நடுத்தரமாக இருப்பதாக இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இனபேதங்கள் வேலையில்லாத்திண்டாட்டம்-இவற்றின் காரணமாக அமெரிக்காவின் அரசியல் ஸ்திரம் நடுத்தரமானதாகவே கருதப்படுகிறது.

ஆட்சி கைமாறும் போது நிலவும் அமைதி, அரசியல் சுதந்திரம் மற்றும் குடியியல் உரிமைகள், மத மற்றும் இனக்குழப்பங்கள் ஆகியவற்றை வைத்தே அரசியல் ஸ்திரமின்மை கணிக்கப்படுகிறது.

இப்படி இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## ராஜ்ய சபை தேர்தலில்தி.மு.க

இந்திய ராஜ்ய சபையில் காலியாக உள்ள ஆறு இடங்களில் ஐந்துக்கு தி. மு. க. போட்டியிடும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார்.

எஞ்சிய ஓர் இடத்துக்கு மார்க்ஸிய கம்யூனிட் சார்பில் திரு. பி. நல்லசிவன் போட்டியிடுவார் என்றும் அவர் அறிவித்தார். (எ)

## சம்பத் மகன் இனியன் காங்கிரஸில்

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராக இனியன் சம்பத் நியமிக்கப்பட்டார்.

இவர் தி. மு. க. ஸ்தாபக உறுப்பினராக இருந்து மறைந்த ஈ. வெ. கி. சம்பத்தின் மகன். (எ)

## முதலமைச்சர் ராமராவின் வலது காதிலும் தோடு

ஹைதராபாத், ஜூலை 1
ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் வலது காதிலும் தோடு போட்டுக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

விசுவாமித்ரர் படத்தை இந்தியிலும் தெலுங்கிலும் ஒரே சமயத்தில் திரு. ராமராவ் தயாரித்து வருகிறார் என்பது தெரிந்ததே.

இரண்டு படங்களிலும் விஸ்வாமித்ரர் வேடத்தை ராமராவே ஏற்றிருக்கிறார். மேனகையாக மீனாட்சி சேஷாத்திரி நடித்து வருகிறார்.

படப்பிடிப்பு கடந்த 18ஆம் திகதி ஆரம்பமானது. அதற்கு முன்னர் ராமராவ் வலது காதில் தோடு போட்டார். அதற்காக காதுகுத்து வைபவம் நடந்தது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இடது காதில் ராமராவ் தோடு போட்டிருந்தார்.

அவ்வாறு செய்தால் 'முக்கிய பதவி' கிடைக்கும் என்று ஜோஸ்யர் அப்போது கூறியிருந்ததால் ராமராவ் அப்படி அணியத் தொடங்கியிருந்தார். (எ)

## தனி என்ஜின் விமானத்தில் உலகைச் சுற்றும் சிறுவன்

மாஸ்கோ, ஜூலை 01
11 வயது அமெரிக்க விமானி ரோனி ஏலியன்ஜென கடந்த செவ்வாய் உலக பயணத்தின் ஒரு கட்டமாக மாஸ்கோ போய் இறங்கினார்:

தனி என்ஜின் மட்டும் பொருத்தப்பட்ட செஸ்னா 210 விமானத்தில் போய் இறங்கிய அவனை மாஸ்கோ அதிகாரிகள் உத்தியோக பூர்வமாக வரவேற்றனர்.

இந்த உலக பயணத்துக்கு '1989 நல்லெண்ணப்பயணம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ரானி 2,1/2 லட்சம் அமெரிக்கச் சிறுவர்களின் வாழ்த்துச் செய்தியை சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவிடம் வழங்கினார்.

சோவியத் வெளியுறவு அமைச்சகத்தில் ரோனி செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

லொஸ் ஏஞ்சல்ஸில் இருந்து சென்ற 5 ஆம் திகதி இப்பயணம் ஆரம்பமானது. இம் மாதம் 19 ஆம் திகதி ரோனி தாயகம் திரும்புவான்.

விமானியான தந்தை காரி ஏலியன் ஜெனவும் மகனுடன் கூட பயணம் செய்தாலும் விமானத்தின் கட்டுப்பாட்டு அறைக்குள் செல்வதில்லை, சிறுவன் தானே விமானத்தை இயக்கி வருகிறான். (எ)

## கெரில்லாக்கள் நிராகரிப்பு

இஸ்லாமபாத், ஜூலை 1
ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்கு தீர்வு காண பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாஸீர் அரபாத் வெளியிட்ட யோசனையை கிளர்ச்சியாளர்கள் நிராகரித்து விட்டனர்.

பராமரிப்பு அரசாங்கம் ஒன்றை நிறுவி, அதன் மேற்பார்வையில் ஆப்கனில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே அரபாத்தின் சமரச யோசனையாகும். (எ)

## இந்தியத் தேர்தல் பற்றி ராஜீவ்

போபால். ஜூலை 1
இந்திய நாடாளுமன்றத் தேர்தலுடன் மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களும் நடைபெறுமா?

இக்கேள்விக்கு பிரதமர் ராஜீவ் காந்தி மத்திய பிரதேசத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பதிலளித்தார்.

அவர் சொன்னதாவது;

தேர்தல்கள் விரைவாகவும் நடத்தப்படலாம்.

நாடாளுமன்றத்துக்கும் சட்டசபைகளுக்கும் ஒரே சமயத்திலும் தேர்தல் நடத்தப்படலாம்.

அல்லது, தனித்தனியாகவும் நடத்தப்படலாம்.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (எ)

## கிரனேடா பொலீஸ் அதிபர் ராஜதந்திரி சுட்டுக் கொலை!

சென். ஜோர்ஜஸ்; ஜூலை1
கிரனடாவின் பொலீஸ் அதிபரும் அமெரிக்க ராஜதந்திரி ஒருவரும் நேற்றுச் சுட்டுக் கொலலப்பட்டனர்.

சுட்டவர் என்று கருதப்படும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி பின்னர் மரணமானார்.

கிரனேடா அரசு இச்சம்பவம்பற்றி வெளியிட்ட தகவல்கள் வருமாறு;

மனவியாதியால் பாதிக்கப்பட்ட உதவிப் பொலீஸ் அதிபர் ஒருவரே இத்தாக்குதலை நடத்தினார்.

கிருஸ்டன் போஸ்டன்என்ற இந்த நபர், பொலீஸ் அதிபரின் அலுவலகத்தினுள் பலவந்தமாக நுழைந்து, திரு. றேமனைச் சுட்டார். அவர் அந்த இடத்திலேயே இறந்தார்.

பின்னர் அருகில் இருந்த அறைக்குள் நுழைந்து, அங்கு உதவிச் சமிஷனருடன் பேசிக் கொண்டிருந்த அமெரிக்க ராஜதந்திரி ஜோன் டக்டர் மீது சுட்டார். அவர்பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சுட்டவர் பின்னர் பொலீஸாரிடம் சரணடைந்தார்,

ஆனால் அவர் பின்னர் மரணமானார், எப்படி மரணம் சம்பவித்தது என்பதுபற்றி கிரனேடா அரசு விசாரணைநடத்தி வருகிறது. (எ)

## இஸ்ரவேலின் புதிய நிலை

பலஸ்தீனியரின் 18 மாதக் கிளர்ச்சி நிறுத்தப்பட்டதன் பின்னரே கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் தேர்தல் நடத்தப்படும் என்று இஸ்ரவேல் அரசு அறிவித்து உள்ளது. (எ)

## படப்பிடிப்பில் 'ஹெலி' விபத்து

ஏதென்ஸ், ஜூலை 01
படப்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று மரஉச்சியில் மோதி நொருங்கி வீழ்ந்ததில் அமெரிக்க ஸ்டன்ட் நடிகர் கிளின்ரர் கார்பென்ரர் கொல்லப்பட்டார்,

இச்சம்பவம் 'சுதந்திரம்அல்லது சாவு' என்ற படத்துக்கான படப்பிடிப்பு நடந்த கிரீஸ் நகரான கோர்பூவில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இறந்த நடிகர் ஜேம்ஸ் பொண்ட் படங்களிலும் நடித்தவர். (எ)

● தேசியக் கொடி எரிப்பு:

## அரசியல்சட்டத்துக்குத் திருத்தம் அமெரிக்க அதிபர் அறிவிப்பு!

அமெரிக்கத் தேசியக் கொடியை எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கணிக்க அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

இதனை அதிபர் ஜோர்ஜ்புஷ் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

தேசியக் கொடியை எரிப்பது தண்டனைக்குரிய குற்றமல்ல; எரிப்பது தேசியக் கொடியின் புனிதத்தை மாசுபடுத்துவதாகக் கொள்ள முடியாது— இப்படி அமெரிக்க உயர் நீதிமன்றம் பெரும்பான்மை தீர்ப்பு ஒன்றை அளித்தது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்தே அமெரிக்க அரசியல் யாப்புக்குத் திருத்தம் கொண்டு வரப் போவதாக அதிபர் புஷ் தெரிவித்திருக்கிறார். (எ)



## அமெரிக்காவிற்குப் பரவிய மே. ஆபிரிக்க எய்ட்ஸ் வைரஸ்

மேற்கு ஆபிரிக்காவில் பரவலாகக் காணப்படும் மிகக் கடுமையான எய்ட்ஸ் வைரஸ் கிருமிகள் அமெரிக்காவிலும் சிலருக்குத் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக நியூயோர்க் நகர நிர்வாகம் அறிவித்துள்ளது:

இதுகால வரை எச் ஐ வி -1 ரக எய்ட்ஸ் வைரஸ்தான் அமெரிக்காவில் பரவியது.

எச். ஐ. வி – 2 ரக வைரஸ் பரவியிருப்பது அமெரிக்க சுகாதார அதிகாரிகளுக்கு அதிர்ச்சியளித்து உள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**V. T. & SONS**
Qualified Optician
and
Dentist
302, Clock Tower Road
JAFFNA.
( Front of B. M. C.
Manager
Dr, Regi Soloman

# உதயன்

02 - 07 - 1989 ஞாயிற்றுக்கிழமை

**வி. ரி. அன் சன்ஸ்**
● பல் வைத்தியரும்
● கண் பரிசோதகரும்
302, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.
(B. M. C. க்கு முன்பாக)
முகாமையாளர்
Dr. றெஜி சொலமன்

## அமைதிப்படை வாபஸ்; நடைமுறைக்கு ஒவ்வாதது
### அமெரிக்காவில் பந்த தகவல்

வாஷிங்டன், ஜூலை 2 வருகிற 29 ஆம் திகதிக்கு முன்னர் அமைதிப்படை வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை நடைமுறைக்கு ஒவ்வாதது:

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் வாஷிங்டனில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குரிய அதிகாரப் பரவலாக்கல் சரிவர நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை இந்திய -இலங்கை ஒப்பந்தம் வலியுறுத்துகிறது,

அமெரிக்கத் தலைவர்களுடனை பேச்சுக்களின் போது இலங்கை நிலைமை பற்றியும் தீவிரமாக ஆராயப்பட்டது:

இலங்கைப் பிரச்சினையில் உள்ள சிக்கலான நிலையை அமெரிக்கர்கள் நன்கு உணர்ந்து புரிந்து உள்ளனர் என்றுர். (ஒ-எ)

## பொது வேலைநிறுத்த அழைப்பு

கொழும்பு, ஜூலை 2 சகல தொழில் துறைகளைச் சேர்ந்தவர்களும் நாளை திங்கட்கிழமை பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று கோரி கொழும்பில் போராட்ட முன்னணி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது,

தற்போது தொடர்ந்து நடைபெற்றுவரும் போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகவே பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

பொது வேலைநிறுத்தத்துக்கு சகல அரச பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சுவரொட்டிகளில் கோரப்பட்டுள்ளது. (அ-10)

## இன்று தேர்

குருநகர், ஜூலை 2 ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினர் கோவில் இரதோற்சவம் இன்றுஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க-51)

## பஸ்மீது சூடு; சாரதி மரணம்!

கொழும்பு, ஜூலை 2 கம்பஹா மாவட்டத்தில் இம்புல்கொட என்னும் இடத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தனியார் பஸ் ஒன்று மீது சுட்டனர்:

அப்போது பஸ் சாரதி உயிரிழந்தார். 2 பயணிகள் காயமடைந்தனர்.

இந்த பஸ் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒ-எ)

## பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2 யாழ்-பல்கலைக்கழக கலைப்பிரிவு 3 ஆம் வருட மாணவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிமகிழமை ஒருநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்-பல்கலைக்கழக மாணவர்கள் எஸ். தனபாலன், கீதன் ஆகியோர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர். இதனை அட்சேபித்தே மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டதாக தெரிகிறது

### இலங்கை---

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பினரும் கலந்து கொள்ளும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். இதுவே தி மு.கவின் நிலை''— என்று சொன்ஞர். (ஒ-எ-ச)

# மக்களை அடிப்படையாகக் கொண்ட சமூக அபிவிருத்தியே இன்று தேவை
## இதற்கு வங்கிகளின் பங்களிப்பு அவசியம் எனவலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 02 ''மக்களை அடிப்படையாகக் கொண்ட சமூக அபிவிருத்திதான் இன்றைய காலத்தின் கோட்பாடு ஆகும்.

வங்கிகளும் இதில் அவற்றின் பங்கை அளிக்க வேண்டும்''.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் திரு. கே. துரைராசா மேற்கண்டவாறு கூறிஞர்:

நேற்று யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை வங்கியின் சமூக கடன் வழங்குனர் பற்றிய கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு கூறிஞர்.

வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு. ஈ. ஜெ. வின்சன்ட் கருத்தரங்குக்குத் தலைமை வகித்தார்.

திரு. துரைராசா மேலும் பேசுகையில், வங்கிகள் வழங்கும் கடன் கிராமப்புற ஏழை மக்களைச் சென்றடைய வேண்டும். கடன் வழங்குநர்கள் இதற்குத் துணைபுரிய வேண்டும் என்று கூறிஞர்—

இலங்கை வங்கியின் கடன் வழங்குநர் திட்டத்திஞல் வங்கி வாசலை எட்டிப் பார்க்காத மக்கள் பலர் பயன் பெறுகிறுர்கள் எனறு அவர் கூறிஞர்.

உதவி முகாமையாளர் திரு பி. ஜே. வின்செனட் தமது தலைமையுரையில் கடன் வழங்குநர் திட்டத்தின் நோக்கம் பற்றியும் செயற்பாடு பற்றியும் விளக்கிக் கூறிஞர்.

இலங்கை வங்கியின் கடன் ஊக்குவிப்புத் திட்டம் ஜனசக்தித் திட்டத்துடன் தொடர்புடையது வறுமைக் கோட்டில் வாழும் இலட்சக் கணக்கான மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியது இத் திட்டம்.

''கிராமங்களில் வறுமைக் கோட்டில் வாழ்கின்ற மக்களை வங்கி இனம் கண்டு கொள்வதற்கு எமது கடன் வழங்குநர்கள் உதவுகின்றுர்கள்'' என்றும் அவர் கூறிஞர்.

கருத்தரங்கில் யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்டு ஜனசக்தித் திட்டம் பற்றி விவரமாக எடுத்துரைத்தார்.

''எமது நாடு 1948 இல் சுதந்திரம் அடைந்தது முதல் வறுமையை ஒழிக்க எத்தனையோ திட்டங்கள் வக்குகப்பட்டன. அவற்றில் இன்றையது ஜனசக்தித் திட்டமாகும். 79 ஆம் ஆண்டுவரை உணவுக் கூப்பன் திட்டம் இருந்தது. பின் உணவு முத்திரைத் திட்டம் அமுலுக்கு வந்தது. தற்போது ஜனசக்தித் திட்டம் வந்திருக்கிறது! என்று அவர் கூறிஞர்.

''மனித சக்தியை ஊக்குவிப்பதுதான் ஜனசக்தித் திட்டம், ஜனசக்தித் திட்டம் பல்வேறு சிந்தனைகளின் ஒன்று திரட்டு ஆகும். அதற்கு இன்றுவரை இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன'' என்றும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மாணிக்கவாசகர் கூறிஞர்.

யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்டங்களின் இலங்கை வங்கிக் கிளைகளின் முகாமையர்ளர்களும் கடன் வழங்குநர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் பிரச்சினைகளையும் எடுத்துக் கூறிஞர்கள்:

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட செயற்பாட்டு முகாமையாளர் திரு. எம். கனகரத்தினம், முகாமையாளர் திரு. கே. திருநாவுக்கரசு: பிரதேச முகாமையாளர் திரு: கே- கணேசமூர்த்தி ஆகியோரும் கருத்தரங்கை வழி நடத்திஞர்கள். (க-10)

## தேடப்படுகிருர்

அமெரிக்கப் பெண் அன்ராவலன்டைன் காணுமற்போனது தொடர்பாக ஆறு அடி உயர கனேடியப் பிரசை ஒருவரை அமெரிக்கத் துப்பறியும் ஏஜன்ஸி ஒன்று தேடி வருகிறது.

### மாணவர்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டத்தைத் திசை திருப்பச் சில சக்திகள் முயலுகின்றன.

யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. முருகநேசன் மாணவர்களின் பாதுகாப்பு விடயம் தொடர்பாக உறுதிமொழி வழங்கிய சில மணி நேரத்தினுள் பரியோவான் கல்லூரி மாணவன் கல்லூரி வளவினுள் வைத்துக் கைது செய்யப்பட்டது அந்த உறுதிமொழியை கேள்விக்குறி ஆக்கிவிட்டது.

எனவே மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள் உடனடியாக, மேலும் காலம் தாமதிக்காமல் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எமக்கு அறியத் தராத வரையில், நாம் பாடசாலை செல்வது எந்த விதத்திலும் பயனைத் தராது.

எனவே தீர்க்கமான முடிவு கிடைக்கும் வரை நாம் பாடசாலைகளைத் தொடர்ச்சியாகப் பகிஷ்கரிப்போம் — என்றுள்ளது.

### தெற்கில் வேலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லப்பட்டது.

**பேசத்தயார்**

பொறுப்பான முழு அமைச்சர் ஒருவருடன் நாம் பேசத் தயாராக இருக்கின்ருேம்.

நாம் முன்னர் 11 கோரிக்கைகளை முன்வைத்தோம். அதை இப்போது நாம் ஆருகக் குறைத்துள்ளோம்.

அவை வருமாறு:—

★ மாதம் 2, 500 ரூபாவுக்கு பதிலாக 500 ரூபா சம்பள உயர்வு வழங்கவேண்டும்.

★ 1982 இல் இருந்து 45 ரூபா மாத அலவன்ஸ் வழங்க வேண்டும்,

★ 1988 – 1989 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 180 ரூபா அதிகரிப்பு வழங்கப்படவேண்டும்.

★ வேலை நிறுத்தத்தின்பின் கைதான ஊழியர் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

★ வேலை நிறுத்தக்காலத்துக்கும் சம்பளம் வழங்க வேண்டும்.


★ சகஜ நிலைமை திரும்பிய பின்னர் ஏனைய கோரிக்கைகள் கவனிக்கப்படும் என்று அரசு உறுதி தரவேண்டும். — என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

### வடமராட்சி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இது இவ்வாறிருக்க, நேற்றைய தினம் மாலை 10. 30 மணியளவில் புலோலி அமைதிப் படைமுகாம் மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் இதனை அடுத்து அமைதிப் படையினரும் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் சொல்லப்பட்டது. இந்தச் சம்பவத்திலும் புலோலி கந்தமுருகனர் சிலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்று பலத்த சேதமடைந்தது.

பருத்தித்துறை, சாமியன் அரசடி ஆகிய பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றன. (ஒ-160-9)

## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
## 'அர்ச்சுனு' — மே-ஜூன் இதழ்




மாத இதழ் ரூபா 4. 00 ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

காசோலை அல்லது காசுக்கட்டளை ''நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' என்று எழுதப்பட்டு ''அர்ச்சுனு'' த. பெ. எண். 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(12009)

## நன்றி நவிலல்
### அமரர் கந்தையா குலேந்திரா S.L.A.S

(கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், வலி-கிழக்கு விசேட ஆணையாளரும்)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எமக்கெல்லாம் வழிகாட்டி அகலாமரணமடைந்த எமது இதய தெய்வத்தின் தகனக்கிரியை, தவிர்க்க முடியாத காரணத்திஞல் 29 - 06 - 89 வியாழக்கிழமை பிற்பகல் கொக்குவில் மயானத்தில் நிறைவேறியது.

அன்னாரது மரணச் செய்திகேட்டு, மரணச் சடங்கில் நேரில் சமூகமளித்தோர், மலர்வளையங்கள் வைத்தும், பிரசுரங்கள் வெளியிட்டும் அஞ்சலி செய்தோர், இரங்கலுரை நிகழ்த்தியோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் மற்றும் எமது துயரத்தில் பங்குகொண்டு பல்லாற்ருலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

தகவல்:
குடும்பத்தினர்.

''ஈஸ்வரி வாசா''
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில். (11427)

## மரண அறிவித்தல்கள்

### சிவனடியான் தங்கராசா

சிவனடியான் தங்கராசா காலமாஞர். இவர் சிவனடியான் - அன்னமுத்து தம்பதிகளின் இரண்டாவது மகனும், சரவணை - கனகம்மா தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் கணவரும், பிறவிஞ, சதீஸ், விதுலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வநாயகம், கமலத்தம்பாள், நிர்மலராசா, (பாறேன்) நடராசா, வரதராசா ஆகியோரின் சகோதரரும், ஜெயராசா, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கேமலதா, மகிந்தன், ஜெருட்சன் ஆகியோரின் மாமனரும், பிரியதர்சன், பிரியங்கா, அரவிந்தன் ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஆவார். அன்ஞரின் இறுதிக் கிரியைகள் 02-07-89 இன்று காலை 10 மணிக்கு கனகசபை வீதி, மானிப்பாய் விலாசத்தில் உள்ள அன்னரது இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு பிப்பிலி மயானத்தில் நடைபெறும், இவ்வறிவித்தலை நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிருேம்,

லோட்டன் வீதி,
மானிப்பாய். [1120]
தகவல்
சி. செல்வநாயகம்

### நாகராசா இராசமணி

''லஷ்மிவாசா'' சுதுமலை வடக்கு, மானிப்பாயைச்சேர்ந்த நாகராசா இராசமணி காலம் சென்று விட்டார். இவர் காலம் சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும், கன்னிகா பரமேஸ்வரியின் தாயாரும். காலம் சென்ற திருமதி நாகலிங்கம், திருமதி இராசலிங்கம், திரு. செல்வநாயகம், திருமதி தியாகராசா. திருமதி நீதிராசாவின் சகோதரியும் ஆவார். அன்ஞரின் இறுதிக் கிரியைகள் 02-07 9189 இன்று பிற்பகல் 2-00 மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் அங்கிருந்து எடுத்துச்செல்லபட்டு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம்செய்யப்படும். இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகின்ருேம்.

''லஷ்மி வாசா''
இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு. (7451)
தகவல்
மகள்

### செல்வி கமலாதேவி சதாசிவம் (தேவி)

செல்வி கமலாதேவி சதாசிவம் [தேவி] சிவபதமடைந்துவிட்டார்.

அன்ஞர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன தொண்டரும், காலம் சென்ற திரு. திருமதி சதாசிவம் அவர்களின் கனிஷ்ட புத்திரியும், திருவாளர்கள் சுப்பிரமணியம் [தனபால்] (பெனின்சுலா குறூப், அரியாலை), சண்முகநாதன் (பேரம்பலம் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), திருமதி தவமணி, செல்வி சு. றஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. க. சுப்ரமணியம் [நடேசு] (உரிமையாளர், பாபு குட்லக் எம்போறியம், பருத்தித்துறை), திருமதிகள் கமலாம்பிகை, பத்மலோசனி என்பவர்களின் மைத்துனியும், கிருபாலினி, கிரிஜா, கிரிதரன், கிருபாகரன் ஆகியோரின் சிறிய தாயாரும், திரு. கி. பாலேந்திரம் (இத்தாலி), கௌதமி, கௌசிகா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்ஞரின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 211/2 இலக்க இல்லத்தில் (நேற்று 01 -07 -89) இல் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சுப்ரமணியம் [நடேசு]
211/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (1033)

### திரு வி. சுப்பிரமணியம்

முன்ஞள் தலைமை ஆசிரியர் பண்டாரிக்குளம் வவுனியா வி. சுப்பிரமணிம் 30 - 06 – 89 இல் காலமாஞர். இவர் உருக்குமணியின் அன்புக் கணவரும், தயானந்தசோதி (உள்நாட்டிறைவரி, யாழ்ப்பாணம்), சிவானந்தசோதி (நீர்ப்பாசன இலாகா, கொழும்பு), தயாவதி, கருணவதி, கலாவதி, ஆனந்தசோதி (கட்டிடத்திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனும், வெற்றிவேலு (ஆசிரியர் விடத்தற்பளை), கமலேஸ்வரன், கேதீஸ்வரதாஸ், இந்திராதேவி, சிவபாக்கியம், சாந்தினி ஆகியோரின் மாமஞரும் கிருபாகரன், கிருவாகினி, ததீசன், தர்ஷினி, லோஜனி, சுதன், சுபாஷினி, எழிலினி, கேதீசன், றஞ்சினி, சுசிகா, பிரியங்கா அவர்களின் அன்புப் பேரனுமாவார். அன்ஞரின் ஈமைக்கிரியைகள் 03-07-89 திங்கட்கிழமை மாலை 3. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்
சு. தயானந்தசோதி.
கல்வயல் வீதி,
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (3013)

### திருமதி திரவியம் ஆறுமுகம்

திருமதி திரவியம் ஆறுமுகம் 22- 06- 89 அன்று லண்டனில் காலமாஞர். இவர் சங்கரத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சித்தியவான்) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், திரு. S. ஆறுமுகத்தின் (Rtd. Deputy Director of Irrigation) அன்பு மனைவியும், காலஞ்சென்ற டாக்டர் செல்லத்துரை, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்ஞரின் ஈமக்கிரியைகள் 19, Domington Road, Kenton, Harraw, Middle sex, HA3, ONB U.K யில் நடைபெற்றதென்பதை அறியத்தருகிருேம்.

தகவல்,
சே. நடேசன்.
கணபதி வாசா,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை: (1128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டிஞல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 892/2 இல் உள்ள அச்சகத்தில் 02-07-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.